விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 156 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 10 புதன்கிழமை (24.05.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.



kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=
மட்டுமே

### போராளிகள் உட்பட
## போரில் உயிரிழந்த அனைவருக்காகவும் நினைவுத்தூபி
### கொழும்பில் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி

3 ஆம் பக்கம் பார்க்க

### திருக்கேதீச்சர பெருந்திருவிழா
கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பம்



## திருமணத்துக்கு சென்ற முச்சக்கரவண்டி விபத்து
### சாரதி பலி; ஐவர் படுகாயம்

(மன்னார்)

திருமண நிகழ்வுக்காக பயணித்த முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி உயிரிழந்துள்ளதுடன் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சிறுவர்கள் உட்பட ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை 11 மணியளவில் மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மன்னாரில் இருந்து பிரதான பாலம் ஊடாக பயணித்த மகேந்

15

# விகாரை நிர்மாணிப்புக்கு எதிராக தையிட்டியில் போராட்டம்

### கஜேந்திரன் எம்.பி, சட்டத்தரணி சுகாஷ், 4 பெண்கள் உட்பட 9 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

தையிட்டியில் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றக்கோரி நேற்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கலந்துகொண்ட கஜேந்திரன் எம்.பி, சட்டத்தரணி சுகாஷ் மற்றும் 4 பெண்கள் உட்பட 9 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)



பொலிஸாரால் வலுக்கட்டாயமாக தூக்கிச் செல்லப்படும் கஜேந்திரன் எம்.பி

### தமிழீழ விடுதலைப் புலிகளின்
## முன்னாள் உறுப்பினருக்கு ஆயுள் தண்டனை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது.

தங்கவேலு நிமலன் என்பவருக்கே இவ்வாறு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

கொழும்பில் தற்கொலைக் குண்

15

## கனடாவுக்கு எதிராக இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்
### பாராளுமன்றில் விமல் வீரவன்ஸ சீற்றம்





(கொழும்பு)

கனடாவுக்கு எதிராக இனப்படுகொலைத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ வலியுறுத்தியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது,

15

## நாடளாவிய ரீதியில் இராணுவத்தை குவிக்குக
### ஜனாதிபதி ரணில் உத்தரவிட்டதாக சபையில் சபாநாயகர் தெரிவிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் பொது மக்களின் பாதுகாப்பிற்காக இராணுவத்தினரை அழைக்குமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வு ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சபாநாயகர் மகிந்த

15

### ஜூலை முதல்
## புதிய மின்சார கட்டணங்கள்

(கொழும்பு)

ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ள புதிய மின்சாரக் கட்டணங்கள் தொடர்பான விபரங்கள் ஜூன் 30ஆம் திகதி அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை இலங்கை

15

## 22 அரசியல் கைதிகளே சிறைகளில் உள்ளனர்
### சபையில் நீதி இராஜாங்க அமைச்சர்

(கொழும்பு)

யுத்த காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் 22 தமிழ் அரசியல் கைதிகள் மட்டுமே தற்போது சிறைகளில் உள்ளனர்.

அவர்களையும் விடுதலை செய்வது தொடர்பான சட்ட நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது என நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன தெரிவித்தார்.

பாராளுமன்றம்

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கனகசபை
**யோகநாதன் (சிறி)**
(வலம்புரி முன்னாள் ஊழியர்)

திதி: 24.05.2023 சதுர்த்தி
பிறப்பு:- 24.04.1951
இறப்பு:- 16.05.2021

ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தன
அப்பா உங்கள் நினைவுகளில்
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
எப்போது வருவீர்கள் எமைக் காண...

சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (15724)

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பையா
**சிவபாதலிங்கம் (ராசா)**

அன்பின் ஊற்றாகி எம்
ஆழ்மனங்களில் பதிந்திருக்கும்
என் அருமை தம்பியே!
வருடம் இரண்டு ஓடி மறைந்தாலும்
மாறுமோ எம் மனங்களில்
உன் நினைவு!
நீ எம்முடன் இல்லை என்றாலும்
உன் நினைவுகள் எம்முடனே
வாழும் தம்பி!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் 02.07.1952
மறைவு 15.05.2021

தகவல்:
நீர்வேலி,
வடக்கு. (15710)
அண்ணன் - சுந்தரலிங்கம்
077 931 9434

# முதலாம் ஆண்டு நினைவு தினம்



தோற்றம் 1934.07.16
மறைவு 2022.06.04

## அமரர் மகேஸ்வரி நவரத்தினம்
## (யோகம்மா ரீச்சர்)

திதி : பூர்வபட்ச பஞ்சமி 24.05.2023

"ஓராண்டு கடந்தாலும் உங்கள் நினைவுகள் என்றும்
எம்மை விட்டு அகலாது"
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (15717)

குடும்பத்தினர்
இல.61/19, மின்[illegible],
கொக்குவில்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ
குடும்பத்தைச் சேர்ந்த சைவ
போசனமுடைய 45 வயதுடைய
சதய நட்சத்திரமுடைய
விவசாயம் பார்க்கும்
மணமகனுக்கு சைவ போசன
முடைய மணமகள் தேவை.
**விவாகரத்தானவர்,**
**சீதனம் எதிர்பார்க்கவில்லை.** (15723)
தொடர்பு
**077 908 4823**

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
எமது கட்டட ஒப்பந்த
நிறுவனத்திற்கு **அனுபவமுள்ள**
**மேசன், கூலியாட்கள்,**
**வெல்டர் தேவை.** (C-6607)
**076 586 4967**
**076 760 0403**

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், கோண்டாவில், இணுவில், மானிப்பாய்,
சுன்னாகம், சங்கானை, ஆனைக்கோட்டை பகுதிகளில்
சிறிய குடும்பம் வசிப்பதற்கு நல்ல நிலையில்
உள்ள வீடு வாடகைக்கு தேவை.
அறை எனினும் பரவாயில்லை. (15725)
தொடர்புகளுக்கு
**076 691 4727**

## மஹோற்சவம்

வேலணை கணபதிப் பிள்ளையார் (முடிப்பிள்ளையார்) ஆலய சோபகிருது வருட மஹோற்சவமானது இன்று காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர் வரும் 02.06.2023 வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.
(ம-7.9)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### சிவயோகசுவாமி
### நினைவுப்பேருரை - 2023

பேருரைத் தலைப்பு :
**சைவப்பாரம்பரியத்தில் குருபரமூர்த்தம்**

பேருரை வழங்குனர் :
**திரு.ச.விநாயகமூர்த்தி** இளைப்பாறிய ஆங்கிலப்
போதனாசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**திகதி :** 25.05.2023 (வியாழக்கிழமை) பி.ப 3.00 மணி
**நிகழ்விடம் :** கைலாசபதி கலையரங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (C-6606)

## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவம் - 2023

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வளாகத்திலுள்ள உணவு கையாளும் வியாபார நிலையங்களுக்கான அறிவுறுத்தல்

- உணவகம் (ஹோட்டல்) சர்பத் கடை தவிர்ந்த ஏனைய உணவு கையாளும் நிலையங்கள் (ஐஸ்கிறீம் கடை, ஐஸ்கிறீம் வாகனம், பூந்தி இனிப்பு வகைகள் மற்றும் மிக்சர் கடைகள்) இவை அனைத்தும் தத்தமது பிரதேச உள்ளூராட்சி சபைகளின் அனுமதியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- ஐஸ்கிறீம் உணவகங்கள், தேநீர், பூந்தி, இனிப்பு, மிக்சர், சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனைவரும் மருத்துவ சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்
- சர்பத் வியாபாரம் செய்பவர்கள் அனுமதி பெற்ற ஐஸ்கிறீம் கடைகளில் மாத்திரமே ஐஸ்கட்டிகளை கொள்வனவு செய்தல் வேண்டும். அத்துடன் அதற்கான பற்றுச்சீட்டை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்
- உணவகத்திற்கும் சர்பத் கடைகளிற்குமான உரிமையாளர்கள் சனிக்கிழமை (03.06.2023) மாலை 04.00 மணிக்கு வற்றாப்பளை பொது சுகாதார பரிசோதகர் உற்சவகால அலுவலகத்தில் இடம்பெறும் கலந்துரையாடலில் கட்டாயம் பங்குபற்றுதல் வேண்டும்
- காவடி உரிமையாளர்கள் அயடின் கரைசலில் செடில்களை கட்டாயமாக கழுவி பயன்படுத்த வேண்டும்
- சிகரேட், புகையிலை, மதுசாரம் ஆலய வளாகத்தினுள்ளே வியாபாரம் செய்வது தடை.

*மேலும் தொடர்புகளிற்கு*

பொது சுகாதார பரிசோதகர் : 077- 2054320 / 077-1211880

மேலும் 16.05.2023ம் திகதி செய்தித்தாளில் பிரசுரித்த சேவைகளிற்கான விலைமனுக்கோரலில் மின்ஒளிச் சேவைக்கான இறுதித்திகதி தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் 26.05.2023 என முற்திகதியிடப்பட்டுள்ளது. எனவே அன்றைய தினம் பி.ப 03.00 மணிக்கு முன் மாவட்ட செயலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன் நாட்டப்பட்ட மின்கம்பங்களை மீள உரிய இடத்தில் கழட்டி ஒப்படைப்பதற்கான விலைக்களை உள்ளடக்கியதாக கேள்வி மனுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். ஏனைய சேவைகள் தொடர்ந்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதன்படி செயற்படுத்தப்படும்.

**பெறுநர்**
**வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம்**
**மாவட்ட செயலகம், முல்லைத்தீவு.**
(C-6605)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் செயற்பாடுகளை பிக்குகள் கண்டித்திருந்தால் நாடு இந்த நிலைக்கு சென்றிருக்காது

## ஐக்கிய பிக்குகள் முன்னணி



(கொழும்பு)

**கடந்த காலத்தில் ராஜபக்ஷக்களின் செயற்பாடுகளை பௌத்த பிக்குகள் கண்டித்திருந்தால் இன்று இந்த நாடு இந்த நிலைக்கு சென்றிருக்காது என முப்பீட ஐக்கிய பிக்குகள் முன்னணியின் அனுநாயக்க மதுரட தம்மாலங்கார தேரர் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் ஐக்கிய பிக்குகள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியிருந்தார்.

கடந்த காலத்தில் மதத்தை விற்று நாட்டை விட்டு ஒரு சரியான ஆட்சியை நடத்த முடியாத அரசாங்கத்தை நாம் பார்த்தோம்.

மீண்டும் அவர்கள் முன்பைப் போன்றே வேறு வழியில் நாட்டை வீணடிக்கும் செயற்பாடுகளை தற்போதும் முன்னெடுக்கின்றனர்.

அதேபோன்று தற்போது பௌத்த மதத்தையும் வீணடிக்கின்றனர். அதாவது அந்த புத்தரின் பாதம்பட்ட நாடு இது. அவ்வாறான நாட்டை வீணடிக்கின்றனர்.

சஜித் பிரமதாஸ இந்த அமைப்பை மாற்றுவாராயின் அடுத்த தலைமுறைகள் சிறந்த முறையில் செயற்படும்.

எங்கள் மீதும் பிழை உள்ளது. அன்று மகிந்தவின் ஆட்களின் செயற்பாடுகளை கண்டித்து இருந்தால் இன்று இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

53 ஆண்டுகள் நாட்டை வீணடித்து விட்டனர். சில ஆண்டுகள் பிரபாகரன் வீணடித்தார் என அவர் தெரிவித்தார். (நி)

# போராளிகள் உள்ளிட்ட போரில் உயிர் நீத்தோருக்காக கொழும்பில் நினைவுத்தூபி

## அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

(கொழும்பு)

போராட்டங்களினால் உயிரிழந்தோரை நினைவுகூரும் வகையில் தலைநகர் கொழும்பில் நினைவுத் தூபி அமைக்கப்பட உள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் ஆயுத போராட்டங்கள், அரசியல் முரண்பாடுகள், சிவில் கலவரங்கள் போன்றவற்றில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் இந்த நினைவுத் தூபி நிர்மானிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிவிலியன்கள், பொலிஸார், ஆயுதப் படையினர் மற்றும் முன்னாள் போராளிகள் உள்ளிட்ட அனைவரையும் நினைவுகூரும் வகையில் இந்த நினைவுத் தூபி அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி)

# மாணவர்களுக்கான பருவகாலச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க தீர்மானம்

## போக்குவரத்து அமைச்சர் பந்துல அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்து சபையினால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் பருவச்சீட்டுக் கட்டணத்தை 25 முதல் 30 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன் புாடசாலை பருவச்சீட்டுக்கு மேலதிகமாக பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான பருவச்சீட்டுக் கட்டணத்தை அதிகரிப்பதற்கு போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, புதிய கட்டண அதிகரிப்புக்கு அமையவே, பாடசாலை மாணவர்களுக்காக போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளை இல்லாது செய்வதா? அல்லது தொடர்வதா? என்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# இத்தாலியில் வாகன விபத்து இலங்கையர் உயிரிழப்பு

(ரோம்)

இத்தாலியின் பெர்கமோவில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த வர்ணகுலசூரிய சஞ்சீவ பிரதீப் பெர்னாண்டோ என்ற 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் துவிச்கர்கர வண்டியில் பயணித்த போது அதே திசையில் சென்ற லொறியில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பேர்கம போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவராக ரோஹண ஹெட்டியாராச்சி நியமனம்

(கொழும்பு)

பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராட்சி ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக பப்ரல் அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த தினம் நிறைவடைந்த தாய்லாந்து பொதுத் தேர்தலுக்கு மத்தியில் பாங்கொங் நகரில் இடம்பெற்ற ஆசியாவின் தேர்தல்வலையமைப்பின்8 ஆவது பொதுக் கூட்டத்தில் 18 நாடுகள் மற்றும் 29 அமைப்புகளில் இருந்து பப்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாரச்சி அதன் பணிப்பாளராகவும் தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பொதுக் கூட்டத்தின் போது செயலாளர் பதவிக்கு பிலிப்பைன்ஸ் நாட்டைச்சேர்ந்த பிலிகோராவும் பொறியியலாளர் பதவிக்கு தாய்லாந்து நாட்டைச் சேர்ந்த பீ.சகுல் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர் சபைக்கு இந்தோனேசியா, மியன்மார், மொங்கோலியா, மாலைதீவு மற்றும் நேபால் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதன் பிரகாரம் 2026 மே மாதம் வரை ரோஹண ஹெட்டியாரச்சி ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவராக செயற்படுவார்.

ரோஹண ஹெட்டியாரச்சி ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் தலைவர் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்னர் ஆசியாவின் தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பின் பொதுச் செயலாளராக 13 வருட காலம் செயற்பட்டுள்ளார். (நி)

# தாவரவியல் பூங்காவுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

தாவரவியல் பூங்காவுக்கான நுழைவுக் கட்டணத்தை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதன்படி ஜூலை 1 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அதன்படி உள்ளூர் பெரியவர்களுக்கு 200 ரூபாவும் சிறுவர்களுக்கான நுழைவுக் கட்டணமாக 30 ரூபாவும் வசூலிக்கப்படும்.

இதேவேளை வெளிநாட்டு பெரியவர்களுக்கான நுழைவுக் கட்டணம் 3,000 ரூபாவாகவும் வெளிநாட்டு சிறுவர்களுக்கு 1,500 ரூபாவும் வசூலிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)

# திருகோணமலையிலும் கடத்தல் முயற்சி தப்பியோடிய 14 வயது சிறுவன்

(திருமலை)

திருகோணமலை பாலையூற்று பிரதேசத்தில் 14 வயதுச் சிறுவன் ஒருவரை கடத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் வீதியில் சென்ற வேளை அடையாளம் தெரியாத நபர்கள் கடத்த முயற்சித்தாக தெரியவந்துள்ளது.

இந்தக் கடத்தல் முயற்சியில் இருந்து தப்பித்த சிறுவன், அவனது ஆடை கிழிந்த நிலையில் வீட்டுக்குச் சென்று நடந்த விடயத்தை தெரிவித்துள்ளான்.

இதனை தொடர்ந்து இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோலி டெல்லிக்காக விளையாட வேண்டிய நேரம் வந்துவிட்டது - பீட்டர்சன்



ஐ.பி.எல் தொடங்கியதிலிருந்து ஒரே அணிக்காக ஆடிவரும் ஒரே வீரர் என்ற தனித்துவமான சாதனைக்கு சொந்தக்காரரர் விராட் கோலி. ஐ.பி.எல் 16 ஆவது சீசனிலும் வழக்கம்போலவே முதல் முறையாக கிண்ணத்தை வெல்லும் முனைப்புடன் களமிறங்கியது ஆர்சிபி அணி.

லீக் சுற்றின் கடைசி 2 போட்டிகளிலும் சதமடித்து ஐ.பி.எல்லில் 7 சதங்களுடன், அதிக சதங்களை விளாசிய வீரர் என்ற சாதனையையும் விராட் கோலி படைத்தார். ஐ.பி.எல்லில் ஆர்சிபிக்காக 237 போட்டிகளில் ஆடி 7 சதங்களுடன் 7263 ரன்களை குவித்துள்ளார்.

ஐ.பி.எல் தொடரில் பல சாதனைகளை படைத்த அவரால் ஆர்சிபி அணிக்காக ஒரு கிண்ணத்தை கூட வென்று கொடுக்க முடியவில்லை. இந்த சீசனிலும் பிளே ஆஃபிற்கு முன்னேறாமல் ஆர்சிபி வெளியேறியது ரசிகர்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

ஐ.பி.எல்லில் கடைசி வரை ஆர்சிபி அணிக்காக மட்டுமே ஆடுவேன் என்றும் வேறு அணிக்காக ஆடுவதை நினைத்துக்கூட பார்க்க முடியாது என்றும் கோலி திட்டவட்டமாக தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் விராட் கோலி டெல்லி கப்பிட்டல்ஸ் அணிக்காக ஆட வேண்டிய நேரம் வந்துவிட்டது என இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான கெவின் பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

அதில், விராட் கோலியின் சொந்த ஊர் டெல்லி தான் என்ற நிலையில், அவர் டெல்லிக்காக ஆட வேண்டிய நேரம் வந்து விட்டதாக பீட்டர்சன் தெரிவித்துள்ளார்.

டெல்லி கப்பிட்டல்ஸ் அணியும் ஒருமுறை கூட கிண்ணத்தை வென்றதில்லை. 2008 ஆம் ஆண்டில் டெல்லி அணி விராட் கோலியை ஏலத்தில் எடுப்பதாக இருந்தது. ஆனால் டெல்லி அணிக்கு இடதுகை வேகப்பந்து வீச்சாளர் தேவைப்படும் நிலையில் பிரதீப் சங்வானை ஏலத்தில் எடுத்தது.

இல்லாவிடில் விராட் கோலி டெல்லி அணிக்காக தான் விளையாடியிருப்பார். பீட்டர்சன் டெல்லி அணிக்காக விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது.

விராட் கோலி சர்வதேச அளவில் 75 சதங்களை விளாசி, சச்சின் டெண்டுல்கரின் 100 சத சாதனையை விரட்டி வருகிறார். சச்சின் சாதனையை கோலி முறியடிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (4)

# அடிடாஸ் நிறுவனத்துடன் பி.சி.சி.ஐ ஒப்பந்தம்




இந்திய அணியின் கிட் ஸ்பான்சராக 2016 இல் இருந்து 2020 வரை நைக் நிறுவனம் இருந்தது.

அதைத் தொடர்ந்து 2020 இல் இருந்து இந்திய கிரிக்கெட் அணியின் கிட் ஸ்பான்சராக இருந்து வந்த எம்பிஎல் ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தம் முடிந்தது.

இந்திய அணியின் மெயின் ஸ்பான்சராக பைஜூஸ் நிறுவனம் இருந்து வருகிறது.

இந்நிலையில், புதிய கிட் ஸ்பான்சராக அடிடாஸ் நிறுவனத்துடன் பி.சி.சி.ஐ ஒப்பந்தம் செய்துள்ளது.

வரும் ஜூன் 7 ஆம் திகதி தொடங்கும் ஐ.சி.சி டெஸ்ட் சம்பியன்ஷிப் ஃபைனலில் இருந்து அடிடாஸ் நிறுவனத்தின் ஒப்பந்தம் தொடங்குகிறது.

அடிடாஸ் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை பி.சி.சி.ஐ செயலாளர் ஜெய் ஷா டுவிட்டரில் உறுதி செய்துள்ளார்.

இந்திய அணியின் ஜெர்சி மற்றும் கிரிக்கெட் சார்ந்த பிற பொருட்களை ரசிகர்களுக்கு விற்பனை செய்யும் உரிமையும் இந்நிறுவனத்திற்கு வழங்கப்படும். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2835

**உஷாந்தன்**

அக்காவோட நண்பர்களை அக்கான்னு சொல்றோம். தங்கச்சியோட நண்பர்களை தங்கச்சின்னு சொல்றோம்.



பொண்டாட்டியோட நண்பர்களை ஏன் பொண்டாட்டின்னு சொல்லக்கூடாது

**ஜெமிலா**

யோவ் விளக்கெண்ண.. மூதேவி... ஒன்னு குடு!

கடைக்காரர்:- டேய்... நீ என்ன கேட்டாய்...?




விளக்கெண்ணெய் 1/2 லீற்றர்... Moov oilment ஒன்று தேவி அகர்பத்தி ஒன்னு குடு யா....

**சிந்துஜன்**

மதிய சாப்பாட்டுக்கு குழம்பை சூடு பண்ணிட்டியா? கேஸ் தீர்ந்து போச்சுங்க...



அதுக்கு ஏன் கவலைப்படுறாய்.... குழம்பை சட்டியோட தூக்கி ரோட்டில வைம்மா... தானா சூடாகிடும்....

**சூரி**

நல்லவேளை மண்டை ஓடு நல்ல ஸ்டாங்கா இருக்கு...



இல்லைனா அடிக்கிற வெயிலுக்கு மூளை உருகி மூக்கு வழியா வந்திருக்கும்....

**டல்சி**

போன்ல நெட்டும்... மனசுல லவ்வரும் இல்லாதவங்க நைட்ல நல்லா தூங்குவாங்க...



**சரணியா**

EB பில் EMI வாடகை கோபின் சந்தா எதபத்தியும் கவலையில்ல மூனு வேளை சோறு பாலு இருந்தா போதும்...




யாருக்காவது தைரியம் இருந்தா சேனல மாத்தி காட்டுங்க பார்ப்போம்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரேமித

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜப்பானில் இருந்து வரும் வரை பதில் பாதுகாப்பு அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (நி)




## பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் 3.5 கிலோ தங்கத்துடன் சுங்கத்துறையினரால் கைது

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சுங்கப்பி ரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மத்திய கிழக்கு நாடொன்றிலிருந்து வருகைத் தந்த அவர் 3.5 கிலோ கிராம் எடையுடைய தங்கத்துடன் வருகைத் தந்த நிலையிலேயே கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்கப்பிரி வினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் தற்போது சுங்கப்பிரி வினரால் விசார ணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)



# பதில் நிதி அமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமனம்

(கொழும்பு)

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டு பயணங்களை முடித்துக் கொண்டு வரும் வரை பதில் நிதியமைச்சராக ரஞ்சித் சியம்பலாபிட்டிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் சனிக்கிழமை நாடு திரும்பவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 550 | 400 | 500 | 600 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 180 | 180 | 200 | 300 |
| தக்காளி | 350 | 300 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 450 | 360 | 400 | 400 |
| கரட் | 260 | 330 | 350 | 400 |
| பூசணி | 100 | 100 | 80 | 100 |
| புடோல் | 160 | 160 | 120 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 350 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 140 |
| பாகற்காய் | 450 | 450 | 600 | 700 |
| வெண்டக்காய் | 200 | 500 | 120 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 300 | 300 | 350 |
| லீக்ஸ் | 350 | 360 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 250 | 240 | 400 |
| கறிமிளகாய் | 300 | 300 | 380 | 500 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 600 | 1000 |
| போஞ்சி | 550 | 500 | 550 | 600 |
| கத்தரிதம்புள்ள | 500 | 300 | 600 | 500 |
| கீரை - 1 பிடி | 120 | 80 | 120 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 250 | 350 |
| வெங்காயப்பூ | 500 | 700 | 600 | 600 |
| முள்ளங்கி | 100 | 160 | -- | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | 100 | -- | -- |

# இராசிபலன்

24.05.2023
வைகாசி 10, புதன்கிழமை
பஞ்சமி பின்னிரவு 2.51 மணிவரை
புனர் பூசம் பிற்பகல் 3.12 மணிவரை

சுபநேரம் -4.22- 5.52 மணிவரை
இராகுகாலம்-11.52-1.22 மணிவரை

சந்திராஷ்டமம்- கேட்டை, மூலம்.

வளவன்

**மேஷம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் ஆதரவால் பெருமைகள் கூடும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்** கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முற்படுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.

**துலாம்** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மகரம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் , சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், திடீர் பயணமொன்று ஏற்படலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப விரயங்கள் கூடும் நாள்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கும், பொதுவாழ்வில் 'புகழ் கூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கும்பம்** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், செய்தொழிலில் முன்னேற்றமுண்டு, மறைமுக போட்டிகள் மாறும், காரிய அனுகூலமுண்டு.

**மிதுனம்** நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், வழிபாடு காரிய வெற்றி தரும், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாக வந்து சேரலாம், சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் வாய்ப்புண்டு, போசன நன்மையுண்டு.

**தனுசு** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் செலுத்தும் நிலை ஏற்படலாம், எடுத்த காரியங்களில் தாமதமாகலாம், விட்டுக் கொடுத்து செல்ல [illegible]

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறாமை என்பது தன்னையே தாக்கும் ஆயுதம்.

# உரும்பிராயில் 50 மில்லிகிராம் ஹெரோயினுடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் 50 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் 28 வயதுடைய பெண்ணொருவர் பொலிஸாரால் கைது செய்ய ப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் ஏற்கனவே ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு நான்கு மாத ங்கள் சிறையிலிருந்து விடு தலையாகியுள்ளதோடு வழக்கு நிலுவையில் உள்ள நிலை யில் மீண்டும் ஹெரோயின் போதைப் பொருளுடன் குறித்த பெண் கைது செய்யப்பட்டு ள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்

கைது செய்யப்பட்ட பெண் ணின் கணவரும் ஹெரோ யின் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டு தற்பொழுது சிறைவாசம் அனுபவித்து வரு வதாகவும் பொலிஸார் தெரி வித்தனர் கைது செய்யப்பட்ட பெண் விசாரணையின் பின் நீதிமன்றத்தில் முற்படுத்த ப்படவுள்ளதாக கோப்பாய் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.(4-6-33)

# அறிவொளி முன்பள்ளி சிறார்களின் பேச்சுத் திறன் காண் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

ஒட்டுமடத்தைச் சேர்ந்த அமரர்களான ச. நடராசா, ந.இர த்தினம் ஆகியோரின் ஞாபகா ர்த்தமாக அவர்களின் குடும்ப உறவுகளின் அனுசரணையு டன் ஆறுகால் மடம் அறிவொளி சனசமூகத்தின் கீழ் இயங்கும் அறிவொளி முன்பள்ளி சிறார் களின் பேச்சுத்திறன் காண நிகழ்வு -2023 எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி க்கு அறிவொளி சன சமூக நிலையத்தின் தலைவர் சி.க. தம்பிராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)



அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் இவ் வருடம் க.பொ.த சா/த பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பாட வழிகாட்டல் கரத்தரங்கு கடந்த 20,21 ஆம் திகதிகளில் சனசமூக நிலைய முத்தமிழ் கலையரங்கில் நடைபெற்றது.

# மல்லாகம் பெரியதம்பிரான் ஆலய வைகாசிப் பொங்கல்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் பெரிய நாயகி தாயார் சமேத பெரியதம்பிரான் திருக்கோவில் வருடாந்த வைகாசிப் பெரும் பொங்கல் மற்றும் தீ மிதிப்பு வழிபாடுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ளது.

இதே வேளை எதிர்வரும் 27 ஆம் திகதி சாடிமனை உற்சவமும் ஜூன் 3 ஆம் திகதி எட்டாம் மடை வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன. (4)

# ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய் யப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் நீதிமன்ற வளாகத்தில் வைத்து எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய ப்படவுள்ளது.

குறித்த பகிரங்க ஏலத்தில் மோட்டார் சைக்கிள் கிளைக் கொள்வனவு செய்பவர்கள் கொடுப்பனவுகளை பணமா கவே செலுத்த வேண்டும். காசோலை ஏற்றுக் கொள் ளப்படமாட்டாது. அடையாள அட்டையுடன் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் ஏல விற்பனையில் பெற்றுக் கொள் ளும் மோட்டார் சைக்கிள்கள் அன்றைய தினமே உடன டியாக வளாகத்திலிருந்து அக ற்ற வேண்டும் என பதி வாளர் அறிவித்துள்ளார். (4)

# வரணி மத்திய கல்லூரி மைதான விவகாரம்

## விசாரணைக்கு உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வரணி மத்திய கல்லூரியில் கடந்த 2021 ஆம் ஆண்டு 3.2 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட்ட மைதான புனரமைப்பு நடவடிக்கைகள் உரிய வகையில் முன்னெடு க்கப்படவில்லை என கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற நிகழ் வில் அங்கஜன் இராமநாத னால் முறைப்பாடு செய் யப்பட்டு விசாரணை அறிக்கை தயா ரிக்க கோரிக்கை முன்வைக் கப்பட்டது.

இதற்கமைய, மேற்படி விட யம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு பூரண அறிக்கை சமர்ப்பிக்குமாறு வடக்கு மாகாண கல்வி பண்பாட்ட லுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவ கார அமைச்சின் செயலாளர் அ. உமாமகேஸ்வரன் உத்தர விட்டுள்ளார். (4-6-33)

# சித்தங்கேணி ஸ்ரீமஹாகணபதி பிள்ளையார் கோயில் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி- பெரிய வளவு ஸ்ரீமஹாகணபதி பிள்ளையார் கோயில் மஹோற்சவ விஞ்ஞாபனம் இன்று புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதி னொரு தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9.30 மணி க்கு தேர்த் திருவிழாவும் மறு நாள் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு திருவூஞ்சல் இடம் பெற்று கொடியிறக்கமும் இடம் பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர்.(4)

# இலங்கைக்கான பிரித்தானிய தூதுவர் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கு உத்தி யோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டுள்ள பிரித்தானிய தூதுவர் சரா ஹல்ரன், இந்தியா மற்றும் இந்து சமுத் திரப் பிராந்தியத்துக்கான இயக்குநர் பென் மெலோர் ஆகியோர் நேற்று யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தனர். இதன் போது யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குண ராஜா, பதிவாளர் வி.காண் டீபன் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

சமகால விவகாரங்கள், பிரித்தானியாவுக்கும், யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத்துக்கும் இடையிலான கல்விசார் உடன்படிக்கைகள் பற்றிக் கேட்ட றிந்த பிரித்தானியத் தூதுவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்படும் சமுதாயச் சமையலறைக்கும் சென்று பார்வையிட்டார். (4-6-33)

# யாழைச் சேர்ந்த மாணவன் சர்வதேச ஒலிம்பியாட் கணிதப் போட்டிக்கு தெரிவு

(சாவகச்சேரி)

பல்கேரியா நாட்டில் இடம் பெறவுள்ள சர்வதேச ஒலிம்பி யாட் கணிதப் போட்டியில் பங்கு பற்ற சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவன் குண ரூபன் சாந்நியன் தகுதி பெற்றுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இருந்து ஒரே ஒரு மாணவன் மாத்தி ரமே இம்முறை சர்வதேச கணிதப் போட்டியில் பங்குபற்ற இருப்பதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

இதற்கு முன்னரும் கடந்த 2014 மற்றும் 2017 ஆம்



ஆண்டுகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்கள் இருவர் சர்வதேச கணித ஒலி ம்பியாட் போட்டிகளில் பங்குபற் றியிருந்தமை குறிப்பிடத்த க்கது, (4-6-30)

# அச்சுவேலி திருட்டு சம்பவத்துடன் தொடர்புடைய பெண் கைது

## திருடப்பட்ட பொருட்களும் மீட்பு

(அராலி)

அச்சுவேலி பொலிஸ் பிரிவி ற்குட்பட்ட, அச்செழு பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 18 ஆம் திகதி அலுமாரியில் வைக் கப்பட்டிருந்த தாலி, தாலிக் கொடி, மோதிரம் மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன களவாடப்பட்டிருந்த நிலையில், இச்சம்பவத்துடன் தொடர்பு டைய அதே பகுதியை சேர்ந்த 48 வயதுடைய பெண் ணொ ருவரை பொலிஸார் கைது செய்துள ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்த நிலையில் இந்த விடயமானது காங்கேசன்துறை விசேட மாவ ட்ட குற்றத்தடுப்பு பிரிவினரின் கவனத்திற்கு கொண்டு செல்ல ப்பட்டது.

இந்நிலையிலே குறித்த கைது நடவடிக்கை முன்னெ டுக்கப்பட்டது. அவரிடமிருந்து, தாலி மற்றும் தாலிக்கொடியை விற்று வாங்கிய சங்கிலி மற்றும் தோடு, ஒரு தொகை பணம், உருக்கிய நிலையி லான தங்கம் என்பன மீட்க ப்பட்டன.

காங்கேசன்துறை மாவட்ட விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் உப பொலிஸ் பரிசோ தகர் அசேல வத்துக்கார தலை மையிலான பொலிஸ் குழுவி னரால் இந்த கைது நடவடி க்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண், மீட்கப்பட்ட தங்கத்துடன் அச்சு வேலி பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டதோடு அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற் படுத்துவதற்கான நடவடிக்கை களை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-6-104)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தின் இதழான "கமலி" நூல் வெளியீட்டு வைபவமும்-சமூக சேவகர்களைக் கௌரவிக் கும் நிகழ்வும் அண்மையில் சுன்னாகம் வாழ்வகம் மண்டபத்தில் இடம்பெற்றது. (படம்- சுன்னாகம் சுரேன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கையில் உயரம் குறைந்த சிறுவர்கள் அதிகரிப்பு

## உலக உணவுத் திட்டத்தின் இணைப்பாளர் சுட்டிக்காட்டியுள்ளார்

(கொழும்பு)

**இலங்கையில் உயரம் குறைந்த சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.**

கடந்த 2021 ஆம் ஆண்டில் 5 முதல் 10 வயது வரையிலான சிறார்கள் மத்தியில் உயரம் குறைந்தவர்கள் எண்ணிக்கை 21 வீதமாக காணப்பட்டது.

எனினும், கடந்த 2022 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 26 வீதமாக உயர்வடைந்துள்ளது. மந்த போசனைக்கு உள்ளான சிறுவர் சிறுமியரே இவ்வாறு உயரம் குறைவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

உயரம் குறைவது பொதுவாக போசாக்கின்மை பிரச்சினைகளினால் ஏற்படுவது எனவும் இதனால் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படும் எனவும் உலக உணவுத் திட்டத்தின் இணைப்புச் செயலாளர் மருத்துவர் கலன பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பிள்ளையொன்றின் வளர்ச்சியில் முதல் ஆயிரம் நாட்கள் மிகவும் முக்கியமானது எனவும் அதன் அடிப்படையில் அடுத்த வருடங்களில் கிரமமான வளர்ச்சி இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவி வரும் பொருளாதார நெருக்கடி நிலைமைகளினால் பெரும்பாலானவர்களினால் போசாக்கான உணவை உட்கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது என பல்வேறு தரப்பினரும் குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கொரோனா தொற்றால் நாட்டில் மூவர் உயிரிழப்பு

## அரசாங்க தகவல் திணைக்களம்

(கொழும்பு)

இலங்கையில் 3 பேர் கொரோனா தொற்றால் உயரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம். திங்கட்கிழமை இந்த உயிரிழப்புக்கள் இடம்பெற்றதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இதேவேளை கொரோனா தொற்றுக் குள்ளான மேலும் 9 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்படி இலங்கையில் 672,380 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாக சுகாதார திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி)



யாழ்.தமிழர் பிரதிநிதிகளுக்கு தமிழ் மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் வழுங்கும் நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் கணிதப் பேராசிரியர் கௌரவ சி.சிறிசற்குணராசா அவர்களுக்கும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கௌரவ முத்து இராதா கிருஷ்ணன் அவர்களுக்கும் கலாபூஷணம் யாழ். பரீட் இக்பால் தமிழ்மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதிகள் வழுங்குவதைப் படத்தில் காணலாம். (15719)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>உயரம்:165 cm<br>தகைமை/தொழில்:O/L சொந்தத் தொழில்<br>தொ.இ: B/13574 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>உயரம்:160 cm<br>தகைமை/தொழில்: Canada<br>எதிர்பார்ப்பு:படித்த பெண்<br>தொ.இ:G/13681 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்:160 cm<br>தகைமை/தொழில்: A/L கடை வியாபாரம்<br>தொ.இ: B/13585 | பிறப்பு:1998 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>உயரம்:5'5<br>தகைமை/தொழில்:A/L தையல்<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, நிரந்தரத் தொழில்<br>தொ.இ: G/13683 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 27<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்: B.com பின்லாந்து<br>தொ.இ: B/13586 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி<br>கி.பா:40 1/4<br>உயரம்:5'5<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு. நிரந்தரத்தொழில்<br>தொ.இ:G/13684 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 12. 3இல் சூரி. செவ்<br>உயரம் : 176 cm<br>தகைமை/தொழில்:QS, BSc<br>எதிர்பார்ப்பு: சிறந்த குணமான பெண்<br>தொ.இ: B/13590 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 59. 8 இல் சூரி. செவ்<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்: MA மொழியியல், செயற்றிட்ட உதவியாளர், அரச தொழில்<br>தொ.இ:G/13689 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்[illegible]
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் [illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



# சேவை நலன் பாராட்டு




திருமதி. மங்களராசேஸ்வரி கருணானந்தன் (உபஅதிபர்)

(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி -SLTS-1)

(யாழ்/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்)

## சேவை விபரம்

யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் 17.08.1988-19.01.1992
யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை 20.01.1992-31.12.1993
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் 01.01.1994-31.12.1995
மு/நட்டாங்கண்டல் அ.த.க பாடசாலை 01.01.1996-19.07.1998
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் 20.07.1998-14.02.2001
யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம் 15.02.2001-31.12.2003
யா/நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம் 01.01.2004-05.01.2014
யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் 06.01.2014-15.02.2023

அகவை ஐம்பத்தேழில் உபஅதிபர் பணியிலிருந்து ஓய்வுபெறும் எமது உபஅதிபரின் ஓய்வுக்காலம் சிறும் சிறப்புமாக அமைய மனதார வாழ்த்துகின்றோம்.

(15702)

வாழ்த்துவோர்: பாடசாலை நலன்புரிக்கழகம், யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 144

# நடிகன் எனும் கர்வம் அகன்ற தருணம்

மம்முட்டி எழுதிய,மூன்றாம் பிறை வாழ்வனுபவங்கள் என்ற அவரின் நூலில் பின்வரும் சம்பவத்தை எழுதியுள்ளார்.

சூட்டிங் முடிந்த ஒருநள்ளிரவு வேளை வேறு நகரத்திலிருந்து என் வீடு நோக்கி காரில் புறப்பட்டேன்.

புறப்பட்ட சிறிது நேரத்தில் அடர்ந்த வனப்பகுதிக்குள் நுழைகிறது என் வாகனம். அமைதியாய் என் காரில் ஒலிநாடாவை ஒலிக்க விட்டுக் கொண்டு வாகனத்தை செலுத்திக் கொண்டிருந்தேன்.

அந்த அடர் இருளில் மெல்லிய எளிய உருவம் ஒன்று பாதை ஓரம் நின்று கை காட்டியது.

பார்க்க ஒடிசலான வயசான முதியவர் கையில் சிறு விளக்குடனும், தலையில் முக்காடுடனும்,

கை நீட்டி நின்று கொண்டிருந்தார். இந்த இராத்திரி வேளையில் யார் என தெரியாமல் வண்டியை நிறுத்தி மாட்டிக் கொள்வேனோ என, வண்டியை நிறுத்தாமல் சிறிது தூரம் சென்று விட்டேன் இருப்பினும்

மனதில் ஏதோ ஒரு இனம் புரியாத சஞ்சலம் அந்த முதியவர் கண்ணில் தெரிந்த தவிப்பும் கவலையும் ஒரு கணம் என்னை யோசிக்க வைத்தது. வண்டியை திருப்பி மீண்டும் அந்தப் பகுதியை அடைந்தேன்.

அந்த முதியவர் அங்கேயே தான் நின்று கொண்டிருந்த வேளை கீழே ஒரு பெண் அமர்ந்திருந்தாள்.

இருட்டில் நான் முதலில் அவளை கவனிக்கவில்லை போலும். எங்க ஐயா போகணும்? எனக் கேட்டேன் முதியவர் இது என் பேர்த்தி. வயிற்று வலி. நெறமாச கர்ப்பிணி. ரொம்ப நேரமா இங்கேயே நிக்கிறோம்.

ஒரு வண்டியும் வரலை ஐயா என்றார். சரி. ஏறுங்க என சொல்லி இருவரையும் ஏத்திக் கொண்டு ஒரு அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறேன்.

இன்னுமா நாம யாருனு இவருக்கு தெரியல? என்ற யோசனை மட்டுமே என் மனதுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. நானும் ஒரு சாதாரண மனிதன் தானே! ஒரு வேளை பேர்த்தி பற்றிய கவலையிலும்,

இந்த இருளிலும், நம்மை அவருக்கு அடையாளம் தெரியாது போயிருக்கலாம் என என்னை நான் சமாதானம் செய்து கொண்டேன். அந்தப் பெண் கிட்டத்தட்ட மயக்க்முற்ற நிலையிலிருந்தாள்.

மருத்துவமனையை அடைந்ததும் செவிலியர்கள் ஸ்ட்ரெ ச்சரில் அவசரமாக அந்தப் பெண்ணை ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்குள்ளே விரைந்தனர். அப்போது நான் காரை விட்டு இறங்காததால், செவிலியர்களும் என்னை கவனிக்க வில்லை.

பிறகு அந்த முதியவர் என் அருகில் வந்து, அவசரத்துக்கு உதவியதுக்கு நன்றி ஐயா.

இந்தா, இத டீ செலவுக்கு வச்சிக்க. என என் கையில் ஒரு பணத்தை திணித்தார்.

அந்த ஓட்டை ஒடிசலான, அழுக்கு பிடித்த பணத்தை, எந்த கடையிலும் சிங்கிள் டீ கூட குடிக்க உதவாத, செல்லாத, ரெண்டு ரூபாவைப் பார்த்து விட்டு, அவரை ஒரு முறை மீண்டும் ஏறெடுத்து பார்க்கிறேன்.

அவரோ, சும்மா வச்சுக்கப்பா , என்ற படி மருத்துவ மனைக்குள் வேக வேகமாக போய் சட்டென மறைந்து விட்டார். நான் என்ற, எனது நடிகன் என்ற கிரீடமும், சுக்கு நூறாய் நொறுங்கி விழுந்த கணம் அது.

நான் இதுவரை எத்தனையோ தேசிய விருதுகள் வாங்கி விட்டேன். ஆனாலும் அதை எல்லாத்தையும் விட இன்னும் பத்திரமாய் பொக்கிஷமாய் அந்த இரண்டு ரூபாவை பாதுகாத்து வருகிறேன்.

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் Valampurii@yahoo.com இலக்கத்திற்கு அல்லது எனும் E.Mail இற்கு அனுப்பி வையுங்கள்

# இந்தியப் பெருங்கடலில் கவிழ்ந்த சீன மீன்பிடிக்கப்பல் இதுவரை ஏழு உடல்கள் மீட்பு

(பீஜிங்)

மத்திய இந்தியப் பெருங் கடலில் கவிழ்ந்த சீன மீன்பிடிக் கப்பலில் இருந்து ஏழு உடல்கள் மீட்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

காணாமல் போன பணியாளர்களை மீட்கும் வகையில் முழுத் தேடலுக்கு, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் உத்தர விட்ட சில நாட்களுக்குப் பின்னர் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

சீனாவின் தொலைதூர மீன்பிடிக் கப்பலான "லுபெங் யுவான்யு 028" கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை கவிழ்ந்ததில் காணாமல்போன 39 பணியாளர்களை மீட்கும் முயற்சிகளில் அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை , இந்தோனேசியா, மாலைதீவு மற்றும் பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட பல நாடுகள் ஈடுபட்டுள்ளன.

கப்பலில் பயணித்த 39 பேரில் - 17 சீனர்கள், 17 இந்தோனேசியர்கள் மற்றும் பிலிப்பைன்ஸைச் சேர்ந்த ஐந்து பேர் அடங்கியுள்ளனர்.

இந்தநிலையில், கப்பலின் அறையில் இருந்த எச்சங்களை இலங்கை நீர்மூழ்கிக் குழுவினர் கண்டுபிடித்துத் மீட்டுள்ளதாக சீன போக்குவரத்துத் அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# டோக் பிசின் மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை வெளியிட்ட மோடி



(இந்தோனேசியா)

பப்புவா- நியூகினியில் டோக் பிசின் மொழியில், மொழி பெயர்க்கப்பட்ட திருக்குறள் நூலை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டுள்ளார்.

இந்தியா - பசுபிக் தீவுகள் ஒத்துழைப்புக்கான மன்றத்தின் மூன்றாவது உச்சி மாநாட்டையொட்டி இந்தியப் பிரதமர், கடந்த ஞாயிற்றுக் கிழமை பப்புவா நியூகினிக்கு சென்றடைந்தார்.

இதன்போதே, டோக் பிசின் மொழியில் மொழிபெயர்க்க ப்பட்ட திருக்குறள் நூல் இந்திய பிரதமரினால் வெளியிடப்பட்டுள்ளது.

பப்புவா- நியூகினிக்கு சென்ற இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை வரவேற்ற அந்நாட்டு பிரதமர் ஜேம்ஸ் மரபே, அவரது பாதங்களைத் தொட்டு அவருக்கு சம்பிரதாய வரவேற்பு அளித்தமை குறிப் பிடத்தக்கதாகும். (நி)

# சவுதியின் முதல் பெண் விண்வெளியாளர் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு பயணம்

(கட்டார்)

பெண்ணொருவர் உட்பட இரு சவுதி அரேபியர்கள் முதல் தடவையாக தனியார் விண்வெளிப் பயணத்திட்டத்தின் மூலம் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குப் பயணமாகியுள்ளனர்.

மார்பகப் புற்றுநோய் ஆராய்ச்சி யாளரான ரயன்னா பர்னாவியே விண்வெளிக்குச் சென்றுள்ள முதல் சவுதி அரேபியப் பெண்ணாவார். விண்வெளிக்குச் சென்றுள்ள முதல் அரேபிய பெண்ணும் இவரே. (நி)




# ஜல்லிக்கட்டு காளையுடன் புகுந்த வீட்டுக்குச் சென்ற மணமகள்



(சென்னை)

நாகமலை புதுக்கோட்டையில் திருமணம் முடிந்த கையோடு தான் வளர்த்த ஜல்லிக்கட்டு காளையை சீர்வரிசையாக புகுந்த வீட்டுக்கு மணமகள் அழைத்துச் சென்றுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகத்தின் மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் அருகே அய்யங்கோட்டையைச் சேர்ந்த சிவப்பிரியா என்பவவருக்கும், நாகமலை புதுக்கோட்டையைச் சேர்ந்த ராஜபாண்டி என்பவருக்கும் நேற்று முன்தினம் வெகு விமர்சையாக திரும்மணம் நடைபெற்றது.

மணமகள் சிவப்பிரியா பொதுப்பணித் துறையில் பணியாற்றி வருவதோடு, தமிழர் பாரம்பரியம் மாறாமல் ஜல்லிக்கட்டு காளையையும் வளர்த்து வந்துள்ளார். திருமணம் முடிந்த கையோடு திருமண சீருடன், தான் வளர்த்து வந்த ஜல்லிக்கட்டு காளையையும் புகுந்த வீட்டுக்கு அழைத்துச் சென்றுள்ளார். முன்னதாக, ஜல்லிக்கட்டு காளையை மண மேடையில் ஏற்றி மணமகனுக்கு அறிமுகம் செய்தார். தொடர்ந்து மணமகனும் மணமகளும் ஜல்லிக்கட்டு காளைக்கு முத்தமிட்டு புகைப்படங்களை எடுத்துக்கொண்டனர்.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தொடர்பான வழக்கில் சமீபத்தில் வெற்றி கிடைத்துள்ள சூழலில், பாரம்பரியம் மாறா மல் தான் வளர்த்த காளையை புகுந்த வீட்டுக்கு மணமகள் கூட்டிச் சென்றுள்ள சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பாடசாலை விடுதியில் தீப் பரவல்

# 19 மாணவர்கள் உடல்கருகிப் பலி

## தென் அமெரிக்க நாடான கயானாவில் சோகம்

**(கயானா)**

**கயானாவில் உள்ள பள்ளி விடுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் 19 மாணவர்கள் பரிதாபமாக பலியாகினர்.**



தென் அமெரிக்க நாடான கயானாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மஹறியா நகரில் அரசு பள்ளி விடுதி ஒன்று செயற்பட்டு வந்தது.

இங்கு ஆண்கள், பெண்கள் என 30க்கும் மேற்பட்டோர் தங்கி இருந்தனர்.

இந்நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பள்ளி விடுதியில் திடீரென தீ விபத்து ஏற்பட்டது. இதில் 19 மாணவர்கள் பலியாகினர்.

மேலும் பலர் காயமடைந்தனர். பலியானவர்களில் பெரும்பாலானோர் சிறுமிகள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தீ விபத்து தொடர்பாக ஜனாதிபதி இர்பான் அலி கூறுகையில், இது ஒரு பயங்கரமான சம்பவம். இது துயரமானது, வேதனையானது என தெரிவித்தார். தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

பள்ளி விடுதியில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 19 குழந்தைகள் பலியானது அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (நி)

# இறந்தவர்களின் உடல்களை தோண்டி எடுத்து திருவிழா கொண்டாடும் இந்தோனேசியா மக்கள்

(இந்தோனேஷியா)

இறந்தவர்களின் உடலினை வருடத்திற்கு ஒரு முறை வெளியில் எடுத்து அவர்களது உறவினர்கள் திருவிழா கொண்டாடுவது பெரும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேஷியாவின் டோராஜாவில் வாழ்ந்து வரும் மக்களே தமது இறந்த அன்புக்குரியவர்களை வருடத்திற்கு ஒரு முறை கல்லறைகளில் இருந்து வெளியே அழைத்துச் வந்து கோலாகலமாக கொண்டாடுகின்றனர்.

இந்த திருவிழாவானது "மானீன"என்று சிறப்பாக அழைக்கப்படுகின்றது.

இவ்வாறாக இறந்தவர்கள் சவப்பெட்டிகளில் இருந்து வெளியே எடுக்கப்பட்டு பின்னர் நன்றாக சுத்தம் செய்யப்படுகின்றனர்.

அதனை தொடர்ந்து புதிய ஆடைகள் அணிவித்து அலங்காரம் செய்கின்றனர்.

இறந்தவர்களின் தொலை



தூரத்தில் வசிக்கும் உறவினர்களும் பலவாறாக கதைகளை பரிமாறிக் கொள்ளவும் விருந்துண்டு மகிழவும் வருகை தருகின்றனர்.

இறந்தவர்களுக்கு பிரியமான தீன்பண்டங்களை எல்லாம் வழங்குகின்றனர்.

ஏனென்றால் ஆவி உடலுக்கு அருகில் உள்ளது என்றும் தனக்கு நல்ல கவனிப்பை அது விரும்புகின்றது என்றும் இந்த மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

புதைக்கப்பட்டவர்களின் உடல்களை பதப்படுத்தி வைப்பதற்காக மருந்து வகைகளை இவர்கள் பயன்படுத்தி பாதுகாக்கின்றனர் என பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

## மகாராஷ்டிராவில் வாகன விபத்து

## 7 பேர் உயிரிழப்பு 13 பேர் காயம்

(டில்லி)

இந்தியா மகாராஷ்டிரா மாநிலத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்குண்டு 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 13 பேர் காயமடைந்துள்ளனர்.


குறித்த விபத்து நேற்று காலை இடம்பெற்றுள்ளது.

பேருந்தில் ஏற்பட்ட இயந்திர கோளாறு காரணமாக இந்த விபத்து சம்பவித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் குறித்த விபத்தில் சிக்குண்டு காயமடைந்தவர்கள் தொடர்ந்தும் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மகாராஷ்டிரா பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## ஆர்ஆர்ஆர் பட வில்லன் நடிகர் ரே ஸ்டீவன்சன் காலமானார்



(ரோம்)

ஆரஆரஆர் படத்தில் நடித்த நடிகர் ரேஸ்டீ வன்சன் இத்தாலியில் காலமானார்.இயக்குநர் ராஜமவுலி இயக்கத்தில் ஜுனியர் என்.டி.ஆர், ராம் சரண், ஆலியா பட் உட்பட பலர் நடித்து சூப்பர் ஹிட்டான படம் ஆர்ஆர்ஆர். தமிழ், தெலுங்கு, இந்தி உட்பட 5 மொழிகளில் வெளியான இப்படம் ரூ.1,000 கோடிக்கு மேல் வசூலை ஈட்டியது.


இந்நிலையில், ஆர்ஆர் பட்த்தில் நடித்த நடிகர் ரே ஸ்டீவன்சன் (58), இத்தாலியில் காலமானார். இந்தப் படத்தில் வரும் சர் ஸ்காட் என்ற ஆங்கிலேயர் கேரக்டரில் நடித்தவர்.

ஸ்டீவன்சன் ஆர்ஆர்ஆர் படத்தில் ஏற்று நடித்திருந்த எதிர்மறையான பாத்திரமும் அவரின் நடிப்பும் வரவேற்பைப் பெற்றது.

அவரது மறைவுக்கு இரங்கல் தெரிவித்துள்ள ஆர்ஆர்ஆர் படக்குழு, அனைவருக்கும் அதிர்ச்சியளிக்கும் செய்தி! ரே ஸ்டீவன்சன், நிம்மதியாக ஓய்வெடுங்கள். நீங்கள் எங்கள் இதயங்களில் சர் ஸ்காட் ஆக என்றென்றும் இருப்பீர்கள் என பதிவிட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இருந்து கொடிச்சீலை திருக்கேதீச்சரத்திற்கு கொண்டு செல்லப்பட்டது



(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவுக்காக 40 வருடங்களுக்கு பின்னர் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிச்சீலை திருக்கேதீச்சரம் ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டது.

கொடிச்சீலை உபயகாரரான திருநெல்வேலி கென்னடி வீதியில் உள்ள சண்முகநாதன் கபிலன் வீட்டிலிருந்து கொடிச்சீலை எடுத்து செல்லப்பட்டு திருநெல்வேலி வெள்ளைப் பிள்ளையார் ஆலயத்தில் வைக்கப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீச்சர ஆலயத்திற்கு கொடிச்சீலை வாகனத்தில் எடுத்து செல்லப்பட்டது.

திருக்கேதீச்சர ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

1982 ஆம் ஆண்டிற்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இருந்தே திருக்கேதீச்சரத்திற்கு கொடிச்சீலை வழங்கப்பட்ட நிலையில் யுத்த காலத்தில் அந்த முறை கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த வருடம் திருக்கேதீச்சரத்திற்கு கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில் 40 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் திருக்கேதீச்சர ஆலயத்திற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கி வைக்கப்பட்டது.

அண்மையில் கொடிச்சீலை உபயகரார்களுக்கான காளாஞ்சி வழங்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றதும் குறிப்பிடத்தக்கது. (4-6-33)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது

(தருமபுரம்)



அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட இரண்டு உழவு இயந்திரங்கள் வன ஜீவராசிகள் திணைக்களத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் சுண்டிக்குளம் தேசிய பறவைகள் பூங்காமுரசுமோட்டை ஊரியான் பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுவதாக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் உரச மூட்டை ஊரியான் பகுதிக்குச் சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தினர் சுண்டிக்குளம் தேசிய பூங்கா பகுதிக்குச் சொந்தமான ஊரியான் பகுதியில் மணல் அகழ்வின் ஈடுபட்ட இரண்டு உழவு இயந்திரங்களை பறிமுதல் செய்ததுடன் மூன்று சந்தேகநபர்களையும் வன ஜீவராசி திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கிளிநொச்சி நீதிமன்றம் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வனஜீவராசிகள் திணைக்களத்தில் தெரிவித்துள்ளனர். (4-6-33-316)

# வெளிநாடு அனுப்புவதாகக் கூறி மோசடி செய்த நபர் கைது

(நெளுக்குளம்)

வவுனியா நெடுங்கேணிப் பகுதியில் வெளிநாடு அனுப்புவதாக கூறி பண மோசடி செய்த நபர் ஒருவரை நெடுங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கைது செய்யப்பட்ட நபர் வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்புவதாக கூறி நெடுங்கேணி பகுதியை சேர்ந்த் சிலரிடம் பணத்தினை பெற்றுள்ளார்.

எனினும் நீண்டநாட்களாகியும் வெளிநாட்டிற்கு அனுப்பாமையினால் பணத்தை வழங்கிய நபர்கள் அதனை மீளத் தருமாறு கோரியுள்ளனர்.

எனினும் குறித்த நபர் பணத்தினை மீள வழங்காத நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் முறைப்பாட்டினை வழங்கியிருந்தனர்.

இதனையடுத்து குறித்த நபரை கைது செய்த பொலிஸார் அவரை வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் முன்னிலைப்படுத்தினர். கைது செய்யப்பட்ட நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (4-6-299)

# மன்னாரில் டெங்கு தீவிரம்! சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்துங்கள்

## அரச அதிபர் பணிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் பராமரிப்பின்றி காணப்படும் காணி உரிமையாளர்கள் தங்களது காணிகளை துப்புரவு செய்து சுகாதாரத் துறையினருக்கு உதவி புரிய வேண்டும். அவ்வாறு உதவி செய்ய முன்வராவிட்டால் காணி உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மன்னார் மாவட்ட அரச அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டி மெல் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் தொடர்பாக உயர் மட்ட அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் மாலை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இதனை தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அந்தக் கூட்டத்தில் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து சென்று கொண்டிருக்கையில் மன்னார் மாவட்டத்தில் இவ்வாண்டு 5 மாதங்கள் முடிவடைந்த நிலையில் 61 நோயாளர்கள் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து டெங்கு நுளம்புகளின் ஆய்வுகளின் அடிப்படையில் நோயாளர்கள் இனங்காணப்பட்ட பிரதேசங்களின் அடிப்படையிலும் மன்னார் பிரதேசத்தில் எமில் நகர், பெரியகமம், உப்புக்குளம், மூர் வீதி, போன்ற இடங்கள் அதி அபாய வலயங்களாக அடையாளம் காணப்பட்டு இவற்றுக்கான கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எதிர்வரும் 25, 26 ,27 ஆகிய திகதிகளில் முன்னெடுக்கப்பட உள்ளதாக தெரிவித்தார். (4-6-285)

# நீரே வராத மகாவலி ஆற்றுத்திட்டத்திற்கு புதிய வலயம் எதற்கு? -சுரேஷ் கேள்வி

(யாழ்ப்பாணம்)

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவையும் முல்லைத்தீவு மாவட்டத்தையும் மையப்படுத்தி மகாவலி ஜெ வலயம் என்ற பெயரில் மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினால் புதிய வலயம் ஒன்றைத் தோற்றுவிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றது.

ஏற்கனவே மகாவலி ஆற்றின் நீர் வடக்கு மாகாணத்திற்கு வருவதற்கு சாத்தியமேயில்லை என்று மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ள நிலையில் புதிதாக உருவாக்கப்படும் ஜெ வலயத்தின் உண்மையான நோக்கம் என்ன என்பதை அரசாங்கம் விளக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை உருவாக்குவதற்கான முயற்சியா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், தெரிவித்திருப்பதாவது,

இன்று மகாவலி எல் வலயத்திற்கே அந்நதியின் நீர் வராத நிலையில், நெடுங்கேணி, மாங்குளம், வவுனிக்குளம், துணுக்காய் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி மகாவலி ஜே என்னும் புதியதோர் வலயத்தை உருவாக்குகிறீர்கள். இதுவும் எல் வலயம் போன்று சிங்களக் குடியேற்றங்களுக்கே தவிர, இங்கு மகாவலி நீர் வரப்போவது கிடையாது.

இந்த புதிய வலயம் தொடங்குவதற்கு முன்பாகவே, நெடுங்கேணியில் 1000ஏக்கர் நிலத்தை சீனக் கம்பெனியின் பினாமி நிறுவனமான தாய்லாந்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றிற்கு, கரும்பு பயிரிடுவதற்கு கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு சுவீகரிக்கப்படவுள்ள நிலங்கள் ஏற்கனவே மத்தியதர வகுப்பினருக்குப் பிரித்து வழங்கப்பட்ட நிலங்கள் ஆகும். யுத்தத்தின் காரணமாக அந்த நிலங்கள் காடுமண்டிப் போக, அவற்றை வன இலாகாவிற்குச் சொந்தமான காணிகள் எனக்கூறி, அவற்றை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்க முயற்சிப்பது கண்டிக்கத்தக்கதும் கண்டனத்திற்குரியதுமாகும்.

திருகோணமலையைச் சுற்றிவளைத்து சிங்களக் குடியேற்றத்தின் மூலம், எவ்வாறு சேருவாவில என்ற சிங்கள தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்டதோ, அதே போல வவுனியாவைச் சுற்றிவளைத்து, சிங்கள குடியேற்றங்களைக் கொண்டு வருவதற்கான ஒரு திட்டமாகவே இது இருக்கின்றது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில், மகாவலி அபிவிருத்தி என்பது முழுக்க முழுக்க சிங்கள குடியேற்றங்களுக்கே என்பதை தமிழ்க் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். மிகப் பாரிய விவசாய நிலப்பரப்பைக் கொண்ட வன்னி மண்ணைப் பாதுகாப்பதன் ஊடாக தமிழ் மக்களின் விவசாயம், பொருளாதாரத்தை நிலைநிறுத்த முடியும்..

மாறாக இவற்றை வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு விற்பதனூடாக அரசாங்கம் ஏதோவொரு வகையில் தான் நினைத்ததை நடைமுறைப்படுத்த முயற்சிக்கிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.(4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால்-காங்கேசன்துறை கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தொடர்ந்தும் தாமதம்

(கொழும்பு)

இந்தியாவின் பாண்டிச்சேரி காரைக்காலில் இருந்து யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வரை யானபயணிகள்கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

காரைக்காலிருந்து காங்கேசன்துறைக்கான பயணிகள் கப்பல் சேவையில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக IndSri Ferry Service நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் நிரஞ்சன் நந்தகோபன் தெரிவித்தார்.

இந்திய மத்திய அரசாங்கத்தின் இறுதிக்கட்ட அனுமதி இதுவரை பெறப்படாததால் குறித்த கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பட்டார்.

இந்தக் கப்பல் சேவையை ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்க ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது.

பின்னர், மே மாத நடுப்பகுதி வரை கப்பல் சேவை ஒத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் மீண்டும் அதன் ஆரம்பத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது. (நி)

# ஏழ்மையான நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இணைந்தது

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியானது ஆசியாவின் 20 ஏழ்மையான நாடுகளில் இலங்கையையும் சேர்த்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்சைடர் மொங்கி என்ற தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி, இலங்கை, வளர்ந்து வரும் ஒரு நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தற்போது அதன் நாணய மதிப்பிழப்பு, அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் கடுமையான தட்டுப்பாட்டால் மனிதாபிமான அவசரநிலை போன்ற பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு நிலவரப்படி தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் ஆசியாவின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட நிதி ஆதாரங்கள், இந்த அளவீட்டின் அடிப்படையில் ஆசியாவிலுள்ள 20 ஏழ்மையான நாடுகளைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக குறித்த தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# அரசாங்கத்திற்கு எதிரான பிரதான சாட்சி ஜனக ரத்நாயக்க-வாசுதேவ சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்கவை அப்பதவியில் இருந்து நீக்குவதற்காக கொண்டு வரப்பட்ட பாராளுமன்ற விவாதத்தின் இறுதியில் இந்த அரசாங்கம்தான் உண்மையான பிரதிவாதி என பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிரான பிரதான சாட்சி ஜனக ரத்நாயக்க எனவும் அவரை அந்தப் பதவி யிலிருந்து நீக்கும் பிரேரணை மக்களின் இறையாண்மை யைப் பறிக்கும் செயலாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொதுமக்களை சுரண்டுவதற்கு மின்சார சபை மேற் கொள்ளும் நடவடிக்கைகளை தடுக்கும் ஜனக ரத்நாயக்கவின் முயற்சி அரசாங்கத்திற்கு பெரும் வேதனையாக உள்ளது.

அரசாங்கத்திற்கு சாதகமாக செயற்படாத ஜனக ரத்நாயக் கவை தண்டிக்க அவர்கள் தயாராக உள்ளனர்.

பொதுப்பயன்பாடுகள் ஆணை க்குழுவை தனது பணியாளராக மாற்ற அரசாங்கம் விரும்புகிறது. ஆனால், பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் சுதந்திரத்தைப் பாதுகாத்து, ரத்நாயக்க மக்களுக்கு தனது கடமையைச் செய்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவி நீக்கம் தொடர்பில் எதிர்வரும் 24 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள பிரேரணைக்கு எதிராக மின்சார பாவனையாளர் சங்கத்தினால் கொழும்பு பொதுநூலகத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட செயலமர்வில் உரையாற்றும் போதே வாசுதேவ நாணயக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

# உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கை

(கொழும்பு)

ஆதார மருத்துவமனைகளில் நிலவும் மருந்து தட்டுப்பாட்டை உலக வங்கியின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆதார மருத்துவமனைகளில் தற்போதும் சில மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சின் அடிப்படை சுகாதார சேவைகள் பிரிவின் உலக வங்கியின் செயற்றிட்ட பணிப்பாளர், மருத்துவர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடியை நிவர்த்திப்பதற்காக சுகாதார அமைச்சின் கோரிக்கைக்கு அமைய உலக வங்கியின் ஒதுக்கீட்டின் கீழ் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# எரிபொருள் கோட்டாவில் மாற்றம் இல்லை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

தற்போது அமுலிலுள்ள எரிபொருள் கோட்டாவில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வாராந்தம் விநியோகிக்கப்படும் எரிபொருளின் அளவை மாற்றமின்றி பேணவுள்ளதாக எரிசக்தி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

கையிருப்பில் உள்ள எரிபொருள் மற்றும் கொள்வனவிற்கான இயலுமை உள்ளிட்ட விடயங்களை கருத்திற் கொண்டு எரிபொருள் கோட்டா முறையில் மாற்றம் ஏற்படுத்தாதிருக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் எரிபொருள் சந்தையில் ஏனைய சர்வதேச நிறுவனங்களின் முதலீடுகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், தற்போது அமுலிலுள்ள எரிபொருள் கோட்டா முறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படக் கூடுமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

---

**சென் ஜோன்ஸ் சபையால் திரு.செ.செல்வறஞ்ஜன் நியமிக்கப்பட்ட தலைவர் பதவியை பின்வரும் காரணத்தால் தானாகவே 24.05.2023 இலிருந்து இராஜினாமாச் செய்ததை பொதுமக்களின் கவனத்துக்கு அறியத் தருவது.**

1. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையானது வைத்திய சேவைக்கு உதவும் நோக்குடன் செயற்படும் ஸ்தாபனமாகும்.

2. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்டத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட ஆணையாளர் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையில் ஈடுபடாதவரும் அங்கீகரிக்கப்பட்ட செல்லுபடியாகும் முதலுதவிச். சான்றிதழ் இல்லாதவரும் ஆகையால் நோயாளருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கும் போது ஏற்படும் பக்க விளைவுகளும் உயிர் ஆபத்துக்களும் ஏற்படும் நிலை இருப்பதாலும் இத்தலைமைப் பதவியிலிருந்து 24.05.2023 இலிருந்து இராஜினாமாச் செய்கின்றேன்.

3. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ். மாவட்டம் அம்புலன்ஸ் சேவையானது அவசர நோயாளர்களை வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லும் போது நோயாளரின் நிலைப்பாட்டை மாவட்ட ஆணையாளர் அவதானித்து அதற்கேற்ற பராமரிப்பு வசதிகளுடன் அம்புலன்ஸ் சேவையை ஒழுங்குபடுத்தல் வேண்டும். இதுவே தற்போது வழமையாகும். சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையில் புதிதாக நியமிக்கப்பட்ட மாவட்ட ஆணையாளர் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையிலும் முதலுதவி சேவை அனுபவம் இல்லாத காரணத்தாலும் நோயாளருக்கு ஏற்படும் ஆபத்து நிலையிலிருந்து தவிர்க்கும் நோக்கில் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்கின்றேன்.

4. யாழ்.மாவட்டத்தில் பதின்மூன்று தகுதிகாண் உத்தியோகத்தர்கள் 2019 ஆம் ஆண்டு தேசிய தலைமை காரியாலய ஆணையாளரின் கவனத்துக்கு அவர்களில் முதலுதவி சேவையில் தகுதியானவர்கள் இருந்தும் அவர்களிலிருந்து ஒருவரைத் தெரிவு செய்யாமலும் யாழ்.மாவட்டத்தில் இத்தகைய சேவையை முன்னேற்றுவதற்கு எத்தனையோ வைத்தியர்கள் முன்வர இருந்தும் அவர்களின் பெயர் சிபாரிசு செய்தும் அவர்களை நியமிக்காதது எனது இராஜினாமாவுக்கு முக்கிய காரணமாகும். நான் மாவட்ட ஆணையாளராகப் பதவியேற்ற காலத்தில் என்னிடம் எனக்கு கையளித்த பணம் சுமார் 10000.00 ரூபாய் மட்டுமேயாகும். நான் பாரமெடுத்த பின் நவீன வசதிகளுடன் பயிற்சி நிலையமும் இரு அம்புலன்ஸ்களும் யாழ்.மாவட்ட மக்களால் உதவிய பணமாகிய 200 லட்சத்திற்கு மேல் வங்கிக் கணக்கில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

இப்பணத்தை சென் ஜோன்ஸ் தேசிய தலைமையக பிரதான நிர்வாக உத்தியோகத்தர் திரு.அஜந்தா ஜெயவர்த்தனாவிடம் 24.05.2023 இல் கையளிக்கின்றேன். இலங்கையில் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் மாவட்ட தலைவர் பதவியில் இரண்டு பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவரும் ஒரு முஸ்லிம் இனத்தவரும் ஒரு தமிழரும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமையகத்தால் வழங்கப்பட்ட தலைவர் பதவி இராஜினாமாக் கடிதத்தையும் கையளிக்கவுள்ளேன். 24.05.2023 இற்குப் பின் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவையால் ஏற்படும் எப்பாதிப்புக்கும் நான் பொறுப்பு இல்லை என்பதையும் இவ்விளம்பரம் மூலம் அறியத்தருகின்றேன்.

**செ.செல்வறஞ்ஜன்** O.STJ,
**தலைவர்,**
**சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்,**
**யாழ்.மாவட்டம்.**

(15721)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோண்டாவில் வாழ் பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**செங்கைப்புரவோன் உயர்திரு.இராசையா குவேந்திரநாதன் அவர்கள்**

சமூக சேவைகளில் சிறப்பான பணிகள் ஆற்றியமையை அங்கீகரித்து, மக்களின் பாதுகாப்பிற்கான மனித உரிமைகள் அமைப்பால்
(Human Rights Organaization for Security of People)

**சாமஸ்ரீ சமூக ஜோதி விருது**

20.05.2023 இல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) இந்தியா மதுரை மாவட்ட உசிலம்பட்டி தமிழக மாநில சட்டசபைப் பிரதிநிதி (MLA) கௌரவ. P.ஐயப்பன் அவர்களால் வழங்கப்பட்டமையை நாமும் மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(15722)

**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ், இல.41, பெரிய கடை , யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 186





அவனுடைய தோட்டமும் வீடும் வடவாற்றின் கரையிலேதான் இருக்கிறது. இங்கே சமீபத்திலேயே இருக்கக் கூடும். எப்படியாவது சேந்தன் அமுதனுடைய வீட்டுக்குத் தூக்கிக்.கொண்டு போய்ச் சேர்த்தால் கந்தமாறன் பிழைக்க வழியுண்டு. ஒரு முயற்சி செய்து பார்க்கலாம்.

கந்தமாறனை மறுபடிய்ம் தூக்க முயன்றபோது அவனுடைய கண்கள் திறந்திருப்பதைக் கண்டு வந்தியத் தேவன் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டான்.

"கந்தமாறா! நான் யார் தெரிகிறதா?" என்று கேட்டான்.

"தெரிகிறது, நன்றாய்த் தெரிகிறது. வல்லவரையவன் நீ! உன்னைப் போல் அருமையான நண்பனைத் தெரியாமலிருக்குமா? மறக்கத்தான் முடியுமா? பின்னால் நின்று முதுகிலே குத்தும் ஆப்தசினேகிதன் அல்லவா நீ?" என்றான் கந்தமாறன்.

வல்லவரையனை இந்தக் கடைசி வார்த்தைகள் சவுக்கினால் அடிப்பது போலிருந்தது.

"ஐயோ! நானா உன்னைப் பின்னாலிருந்து குத்தினேன்?" என்று ஆரம்பித்தவன் ஏதோ ஞாபகம் வந்து சட்டென்று நிறுத்தினான்.

"நீ குத்தவில்லை. உன் கத்தி என் முதுகைத் தடவிக் கொடுத்தது.. அடபாவி! உனக்காக வல்லவா இந்தச் சுரங்க வழியில் அவசரமாகக் கிளம்பினேன். பழுவேட்டரையருடைய ஆட்கள் உன்னைப் பிடிப்பதற்குள் நான் பிடிப்பதற்காக விரைந்தேன். உன்னை யாரும் எந்தவித உபத்திரவமும் செய்யாமல் தடுப்பதற்காக ஓடி வந்தேன். உன்னைத் தேடிப் பிடித்து வந்து சின்னப் பழுவேட்டரையரின் கோட்டைக் காவல் படையில் சேர்த்து விடுவதாகச் சபதம் கூறிவிட்டு வந்தேன். இப்படி உனக்கு நன்மை செய்ய நினைத்த நண்பனுக்கு நீ இவ்வாறு துரோகம் செய்து விட்டாய்? இதுதானா நட்புக்கு அழகு? நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ள வேண்டுமென்று எத்தனை தடவை கையடித்துச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறோம்! அவ்வளவையும் காற்றில் பறக்கும்படி விட்டு விட்டாயே! இந்தச் சோழ நாட்டு இராஜாங்கத்தில் நடக்கப் போகும் ஒரு பெரிய மாறுதலைப் பற்றியும் உனக்குச் சொல்லி எச்சரிக்க எண்ணியிருந்தேனே! அடடா! இனி இந்த உலகத்தில் யாரைத் தான் நம்புவது?" என்று சொல்லிக் கந்தமாறன் மறுபடியும் கண்களை மூடினான். இவ்வளவு அதிகமாகவும் ஆத்திரமாகவும் பேசியது அவனை மீண்டும் மூர்ச்சையடையும்படி செய்திருக்க வேண்டும்.

"நம்புவதற்கு மனிதர்களா இல்லை? பழுவேட்டரையர்களை நம்புவது?" என்று வந்தியத்தேவன் முணுமுணுத்தான். ஆயினும் அவனுடைய கண்களில் கண்ணீர் துளித்தது. தான் சொல்ல எண்ணியதைச் சொல்லாமல் விட்டதே நல்லது என்று எண்ணிக் கொண்டான். கந்தமாறனுடைய உடலை மறுபடி தோளில் தூக்கிப் போட்டுக் கொண்டு நடக்கலுற்றான்.

இரவில் மலரும் பூக்களின் நறுமணம் குபீரென்று வந்தது. சேந்தன் அமுதனுடைய வீடு சமீபத்தில்தான் இருக்க வேண்டும் என்று அவன் எண்ணியது வீண் போகவில்லை.


விரைவில் தோட்டம் வந்தது. ஆனால் அந்தத் தோட்டம்! முதலாவது நாள் பார்த்ததற்கும் இன்று பார்ப்பதற்கு எவ்வளவு வித்தியாசம்? அனுமார் அழித்த அசோகவனத்தையும் வானரங்கள் அழித்த மதுவனத்தையும் அத்தோட்டம் அப்போது ஒத்திருந்தது. ஆகா! தன்னைத் தேடிக் கொண்டு பழுவேட்டரையரின் ஆட்கள் இங்கே வந்திருந்தார்கள் போலிருக்கிறது.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## புகழுக்காக தர்மம்



ஒரு ஊருல கருப்புசாமி வெள்ளைச் சாமினு ரெண்டு விவசாயிகள் இருந்தாங்க. அவுங்க ரெண்டு பேருமே ரொம்ப ஈகை குணம் உள்ளவர்களா இருந்தாங்க கருப்புசாமிக்கு எப்பவும் புகழ் மேல ஆசை அதிகம். எப்பவும் யாராவது தன்னப்பத்தி பேசிக்கிட்டே இருக்கணும்னு நினைச்சான். அதனால அளவுக்கு அதிகமா தர்மம் செஞ்சான். யார் என்ன கேட்டாலும் கொடுத்து அவுங்க தன்ன பத்தி புகழ்ந்து பேசுறத கேட்டு சந்தோஷப்பட்டான்.

ஆனா வெள்ளைச் சாமி புத்தி கூர்மையோட இருந்தான். அவனும் தானம் தர்மம் செஞ்சாலும், யாருக்கு உதவணும்னு தெரிஞ்சு இருந்தான்.

தொடர்ந்து புகழுக்காக தானம் பண்ணுன தன்னோட நண்பன திருத்தணும்னு நினைச்சான். அதுக்காக அவன் ஒரு திட்டம் போட்டான். ஒருநாள் கருப்புசாமி தானம் கொடுத்துக் கிட்டு இருக்குற இடத்துக்கு வந்து, உன்னோட நிலத்த உங்க அப்பா எப்பவோ எங்க அப்பாகிட்ட வித்துட்டாரு. அதுக்கான சாட்சி இந்த பைலல இருககுனு சொன்னான்.

வெள்ளைச்சாமி எப்பவும் பொய் சொல்ல மாட்டான்னு அந்த ஊருல இருக்குற எல்லாருக்கும் தெரிஞ்சிருந்தது, அதனால கருப்புசாமிகிட்ட இருந்து இனி எதுவும் வாங்க முடியாது அவனும் இனி நம்மளைப் போலதான்னு சொல்லிட்டு திரும்பிச்சுட்டு [illegible] எல்லாரும் போக ஆரம்பிச்சாங்க அப்ப ஒரு சிலர்மட்டும் ஐயா எங்களுக்கு சாப்பாட்டுக்கே கஷ்டம் எங்களுக்கு ஏதாவது கொடுங்கன்னு கேட்டு நின்னு கிட்டு இருந்தாங்க.

இத்தனை நாள் தன்னோட ஈகை குணத்தை பாத்து தன்ன பாராட்டுன எல்லாரும் இப்ப அவுங்க வேலைய பாத்துட்டு போனத பாத்து வருத்த பட்டான் கருப்புசாமி, அப்பதான் வெள்ளைச்சாமி பேச ஆரம்பிச்சான், அங்க பாத்தியா உன்கிட்ட எதுவுமே இல்லைனு தெரிஞ்சும் உன்கிட்ட யாசகம் கேக்குற அவுங்களுக்குத்தான் நீ உதவனும், அத விட்டுட்டு உன்ன புகழுறாங்கன்னு எல்லாருக்கும் தானம் கொடுக்கக் கூடாது.

அதனாலதான் இப்படி ஒரு பொய் சொன்னேன்னு சொன்னான்.

அப்ப அந்த பைலல என்ன இருக்குன்னு பார்த்தான் கருப்புசாமி, அதுல ஒரு ஓலை

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற்றெல்லாம் குறியெதிர்ப்பை நீர துடைத்து."

அப்படிங்கிற திருக்குறள் எழுதி இருந்துச்சு

அப்பத்தான் ஏதும் இல்லாதவர்க்குக் கொடுப்பதே ஈகை பிற எல்லாம் கொடுத்ததைத் திரும்பப் பெறும் நோக்கம் உடையதே அப படிங்கிற அர்த்தமும் அவனுக்கு புரிஞ்சது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சான்று நீதிபதியாய் இருந்து தண்டனை தருமுன் நண்பனாய் இருந்து எச்சரிக்கை செய்யும். – ஸ்டானிஸ்லாஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நடந்தது தமிழின அழிப்பு எனும் உண்மை முளையெடுக்கிறது

பூமித்தாய் ஒருபோதும் உண்மையை மறைக்க மாட்டாள் என்பது நிறுதிட்டமானது.

எத்தனை ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும் நிலத்திடை உண்மைகள் வெளிவந்தே தீரும்.

இதற்குப் பல உதாரணங்களைக் கூற முடியும்.

அண்மையில் தமிழ்நாடு சீர்காழியில் கண்டெடுக்கப்பட்ட தெய்வவிக்கிரகங்களும் செப்பேடுகளுமாகும்.

ஆம், சீர்காழியில் கும்பாபிஷேகத்தின் பொருட்டு நடந்த அகழ்வுப் பணியின்போது மேற்குறிப்பிட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இத்தொல்பொருட்களை ஆய்வு செய்தவர்கள் இஃது ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை என சான்றுப்படுத்தியுள்ளனர்.

இதேபோல கீழடியில் நடந்த அகழ்வாராய்ச்சி, தமிழ் இனத்தின் தொன்மையை எடுத்தியம்புகிறது.

ஆக, உண்மைகள் ஒருபோதும் மறையமாட்டாது. மறைக்கவும் முடியாது.

இந்த அடிப்படையில் திருக்கோணேஸ்வரம் இராவணேஸ்வரனால் கட்டப்பட்டது என்பதை அண்மையில் இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் இராவணேஸ்வரனால் கட்டப்பட்டதென்பதை ஏற்றுக் கொள்ளும்போது; இலங்கை சிவபூமி என்ற உண்மையும் அதன் ஆதிக்குடிகள் தமிழர்கள் என்பதும் இயல்பாக அங்கீகரிக்கப்படுகின்றன.

ஆக, உள்ளது இல்லதாகாது. இல்லது உள்ளதாகாது என்ற பிரமாணத்தின் பிரகாரம் நடந்தவை, இருந்தவை என்பவற்றுக்கு எதிராக எந்த அடையாளங்களையும் சாட்சியங்களையும் நிறுத்த முடியாதென்பதை இயற்கை நமக்கு எடுத்தியம்புகிறது.

இந்தவகையில் இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலை என்பது நிச்சயம் உறுதி செய்யப்படும்.

அதனை ஏற்றுக் கொண்டு அதற்காக வருந்துகிறோம் என்று இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் என்றோ ஒரு நாள் கூறியே ஆகுவர்.

இதை நாம் கூறும்போது இது ஒருபோதும் நடக்காதென்று எவரும் பந்தயம் செய்து விடாதீர்கள்.

ஏனெனில் நடக்கும் நடக்காதென்பதெல்லாம் நம் சிற்றறிவுக்குப்பட்டவை.

இதை இன்னுமொருபடி மேற்சென்று கூறுவதாயின், ராஜபக்ஷ தரப்புக்கு எதிராக மக்கள் இப்படியொரு கிளர்ச்சியைச் செய்வார்கள் என்று யாரேனும் நினைத்திருப்பார்களா என்ன?

ஆக, இது நடக்காதென்று மட்டும் யாரும் கூறிவிடாதீர்கள்.

எது நடக்க வேண்டும். எது நடக்கக் கூடாது என்பதை இயற்கை தீர்மானிக்கிறது.

ஆக, இயற்கை உண்மையை ஒருபோதும் மறைக்கமாட்டாது. மறைக்கவும் விடாது.

எனவே வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்தது தமிழின அழிப்பு என்பதை இந்த நாடு என்றோ ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

சிலவேளைகளில் அந்த உண்மை மிக விரைவாக நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏனெனில் இலங்கையில் நடந்தது தமிழின அழிப்பு என கனடா கூறத் தொடங்கிவிட்டது.

அதாவது கனடா என்ற நாட்டின் ஊடாக உண்மை முளை எடுக்கிறது.

இதற்கு இந்தியா, அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட நாடுகள் நிச்சயம் நீர்பாய்ச்சி வளர்க்கும்.

அப்போதுதான் அதன் தாக்கம் என்ன என்பதை இந்த நாடு புரிந்து கொள்ளும்.

# உள்ளூராட்சிமன்றில் அரசியல் நியமனம் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்துவோம்

## பாராளுமன்றில் எதிர்க் கட்சி தலைவர் சஜித்

(கொழும்பு)

பதவிக்காலம் நிறைவடைந்துள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு அரசியல் நியமனங்களை வழங்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை காலவரையறையின்றி பிற்போட்டு விட்டு அரச நிர்வாகத்தை முறையற்ற வகையில் முன்னெடுத்து செல்ல முயற்சிப்பது ஜனநாயகத்துக்கு எதிரானது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

பதவிக்காலம் நிறைவடைந்துள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகத்துக்காக பிரதேச செயலாளர்கள் ஆணையாளர்கள் மற்றும் மாகாண ஆளுநர்கள் ஆகியோரை ஒன்றிணைக்கும் வகையில் நியமனங்கள் வழங்கும் அதிகாரம் பிரதேச அபிவிருத்தி குழு தலைவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கான விசேட சுற்றறிக்கையை அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ளார்.

பிரதேச செயலாளர்கள், மாநகர ஆணையாளர்கள் மற்றும் மாகாண ஆளுநர்கள் ஆகியோரை ஒன்றிணைக்க புதிய நியமனம் ஒன்று வழங்கப்பட வேண்டிய தேவை ஏதும் கிடையாது.

நிதி இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காலவரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அரசியல் வழங்க சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பிரதேச சபை செயலாளர் உள்ளார், மாநகர ஆணையாளர் உள்ளார் இவ்வாறான நிலையில் எதற்கு மேலதிகமாக புதிய நியமனங்கள்.

முறையற்ற வகையில் செயற்படுவதை விடுத்து தேர்தலை நடத்துங்கள். தேர்தலை நடத்தாமல் அரசாங்கத்தின் சகாக்களுக்கு பதவி வழங்குவது முறையற்றது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நீதிமன்றத்தை நாடுவோம் என்றார். (ம-7,9)

## சொகுசு வாகன இறக்குமதியை நிறுத்துக

### மைத்திரி அரசுக்கு ஆலோசனை

(கொழும்பு)

சொகுசு வாகனங்களை இறக்குமதி செய்வதை 5 வருடங்களுக்கு நிறுத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட உரையாற்றிய போதே முன்னாள் ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

நிதியமைச்சின் கீழ் உள்ள பல வரி ஒழுங்குமுறை சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் நேற்று பாராளுமன்றத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்,

மோட்டார் வாகனங்களுக்கான வரி பற்றி நான் பேச விரும்புகிறேன். இது சொகுசு வாகனங்களுக்கான வரியை அதிகரிப்பது பற்றியது. சொகுசு வாகனங்களின் இறக்குமதியை 4 முதல் 5 ஆண்டுகளுக்கு முழுமையாக நிறுத்துமாறு அரசிடம் நான் பரிந்துரைக்கிறேன்.

இந்த நாட்டுக்கு சொகுசு வாகனங்கள் தேவையில்லை. அதன்படி இந்த நாட்டின் பொருளாதாரத்தை சிக்கலின்றி முன்னெடுக்க இது உதவி புரியும்.

கையிருப்பில் போதுமான வாகனங்கள் உள்ளன. ஆகவே, சொகுசு வாகனங்கள் இல்லாமல், குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு இந்த நாட்டை எடுத்து செல்வோம். ஏனென்றால், சொகுசு வாகனங்களுக்கு செலவிடும் அந்நிய செலாவணி அதிகம் என தெரிவித்துள்ளார். (ம-7,9)

## நெடுந்தீவில் அறுவர் கொலை சந்தேகநபர் தொடர்ந்து மறியல்

(யாழ்பாணம்)

நெடுந்தீவு அறுவர் கொலை வழக்கின் சந்தேகநபருக்கு எதிர்வரும் யூன் 6ம் திகதி வரை விளக்கமறியல் வைக்க. ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நெடுந்தீவில் ஐந்து பேர் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டிருந்த நிலையில் இதில் காயமடைந்த இன்னுமொருவருமாக ஆறுபேர் மொத்தமாக உயிரிழந்திருந்தனர்.

இந்த கொலை தொடர்பான வழக்கு ஊர்காவற்துறை நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

இதற்கமைய நேற்று இடம்பெற்ற இந்த வழக்கு விசாரணையின் போது கொலை சந்தேகநபரை அடுத்தமாதம் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் ஜே.கஜநிதிபாலன் உத்தரவு பிறப்பித்துள்ளார். (ம-7,9)

## நீராவியடி பிள்ளையாருக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம் ஸ்ரீ ஜெய நீராவி வீரகத்தி விநாக்யர் ஆலய மஹோற்சவமானது இன்று காலை 9.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து 02.06.2023 வெள்ளிக்கிழமை தேர்த் திருவிழாவும் 03.06.2023 சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ம-7,9)

## முதியோர் இல்லத்தில் சடலம் ஒன்று மீட்பு

ஹொரணை பிரதேச முதியோர் இல்லத்தில் நாற்காலியில் சடலமாக காணப்பட்ட வயோதிபப் பெண் உயிரிழந்தமை தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளதாக ஹொரணை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

88 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பெண் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளதாக முதியோர் இல்லத்தின் பாதுகாவலர் ஹொரணை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் அங்கு சென்ற பொலிஸார் முதற்கட்ட விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதனையடுத்து சடலம் ஹொரணை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்ட நிலையில் பிரேத பரிசோதனை ஹொரணை ஆதார வைத்தியசாலையின் மரண விசாரணை அதிகாரி சுமேதா குணவர்தனவின் உத்தரவின் பேரில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,9)

## அம்பாந்தோட்டையில் ஒருவர் வெட்டிக்கொலை

### 6 பேருக்கு மரண தண்டனை

இருபது வருடங்களுக்கு முன்னர் அம்பாந்தோட்டை பகுதியில் ஒருவரை வெட்டிக் கொன்ற சம்பவம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட 6 பேருக்கு அம்பாந்தோட்டை மேல் நீதிமன்றம் நேற்று (23) மரண தண்டனை விதித்தது.

அம்பாந்தோட்டை கொன்னொருவ மற்றும் கட்டன்வெவ பிரதேசங்களைச் சேர்ந்த சமன் புலத்கம, லலித் பிரசன்ன, ரணசிங்க ஆராச்சிகே ஜினதாச, ஹேவா ஹலபகே வசந்த, திலான் மஞ்சுள மற்றும் எச்.எம். நவரத்ன ஆகிய ஆறு பேருக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2003ம்ஆண்டு ஏப்ரல் 14ம் திகதியன்று அம்பாந்தோட்டை, கட்டன்வெவ பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய திருமணமாகாத விஜேசிங்க. கங்கணம்கே நந்ததிஸ்ஸ என்பவரை மரக் கட்டைகள் மற்றும் பயங்கர ஆயுதங்களால்" தாக்கி கொலை செய்தார்கள் என இவர்கள் மீது குற்றஞ் சுமத்தப்பட்டிருந்தது. (ம-7,9)

## புதிய நிர்வாக தெரிவு

மல்லாகம் கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலயத்தின் புதிய நிர்வாக தெரிவு உடுவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

தலைவராக வே. லோகராஜன், செயலாளராக ச.கிரிசாந்தன், பொருளாளராக பழனி நிர்மலாதேவி, உபதலைவராக சி.இன்பராசா, உப செயலாளராக நா.கணேசமூர்த்தி, உபபொருளாளர் த.மணிவண்ணன், நிர்வாகசபை உறுப்பினர்களாக இ.தர்மசீலன், ச.சர்வர்ஜா,ச.கோசலா, நா.சூரியகுமார், மற்றும் தி.கேசவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

16

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



காலஞ்சென்ற முன்னாள் பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு சித்திர வடிவேலு அவர்கள் எழுதிய "கடலக மீன்பிடியியல்" என்னும் நூலில் பாரம்பரிய மீன்பிடிப் பயணம் என்ற பகுதியில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

அன்றாட மீன்பிடியைப் பற்றி அதன் செயற்பாடு பற்றி ஊன்றி சிறிது ஆராய்வோமானால் இத்தொழில், காலமாற்றங்கள், நீரோட்ட மாற்றங்கள், காற்று மாற்றங்கள் போன்றவற்றினால் மாறுபடுவது மன்றி, இம்மாற்ற நிகழ்வுகளினால் பிடிக்கப்படும் மீன் இனங்களும் மாறுபடுவதுண்டு. அதற்கேற்ப பாவிக்கப்படும் வலைகளும் மாறுபடுவதுண்டு. இதே அடிப்படையில் அன்றாடம் மீன்பிடிப்பவர்களை அணுகினால் பெரும்பான்மையானவர்கள் இரவு மீன்பிடியையே கூடுதலாக கைக்கொள்கின்றனர்.

அந்த வகையில் வழிச்சல் வலை பாவிப்பவர்களை எடுத்துக் கொண்டால் பெரும்பான்மையானவர்கள் கடற்கரையை அண்டியே வாழ்வதனால் பகல் பொழுதில் தத்தமது வலைக்ளைச் சீர் செய்வதிலும் அதைத் தங்கள் வள்ளங்களில் ஏற்றிவைத்து, பிடிக்க செல்வதற்கு ஆயத்தமாக பாயையும் பாய்மரங்களையும் சீர்செய்து ஒழுங்குபடுத்தி வைப்பதையும் காணலாம். அன்றியும் ஒழுங்குகள் யாவும் சரியெனக் கண்டதும் பிற்பகல் இரண்டு அல்ஸ்து மூன்று மணிக்கே வீட்டை விட்டு புறப்பட்டு விடுவார்கள்.

பொதுவாக ஒரு வள்ளத்தில் மூன்று பேர் இணைந்தே செல்லும் போது இரவுக்கேற்ற சாப்பாடு, குடிதண்ணீர், வெளிச்சமூட்டும் லோமியா என்பனவற்றுடன் புறப்படுவார்கள். காற்றின் திசையைப் பொறுத்து பாயின் உதவியுடனேயே வள்ளத்தில் தமது மீன்பிடிக்கும் நிலையத்தை நோக்கிச் செல்லுவர். புறப்பட்டு சுமார் மூன்று நான்கு மணி நேரத்தின் பின் தாம் வலை படுக்கும் இடத்தை அடைவர். என்பது குறிப்பிடத்தக்கது.

**பாரம்பரிய மீனவர்கள் தங்கள் தொழில் அனுபவத்தைக் கொண்டு காலத்துக்குக் காலம் என்ன இனமீன்களைக் குறிப்பிட்ட இடங்களில் பிடிக்க முடியும் என்ற ஊகத்தை வைத்தே மீன்பிடி இடத்தை தெரிவு செய்வார்கள்.**

குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் முதலில் கடலின் ஆழத்தை அறிவதற்காக தமது கைவசமிருக்கும் பாகக்குண்டை (பாரமான இரும்புத் துண்டும் கயிறும் இணைந்தது) கடலில் இட்டு ஆழத்தையும் கடலின் அடி கல்லு நிறைந்ததா, சேறு உள்ளதா, மணல் உள்ளதா என அறிவர். உதாரணமாக சேறு உள்ள கடலானால் பாகக் குண்டில் சேறும் மணலுள்ள கடலானால் பாகக் குண்டில் மணலும்கல் பார் உள்ள கடலானால் பாகக்குண்டு வள்ளத்தின் அசைவில் ஏறி இறங்குவதையும் அவதானித்து தமது மீன்பிடி இலக்கை நிர்ணயித்துக் கொள்வர். அதன்பின் சீராக்கப்பட்டிருக்கும் தமது வலைகளை தமது மீன் படுக்கத் தொடங்குவர். சுமார் 50 யார் கொண்ட முப்பதுக்கதிகமான வலைகளைப் படுப்பர்.

காற்றின் வேகத்தில் வள்ளம் இழுத்துச் செல்லப்படும் வேகத்தில் வலைகளை கடலில் படுத்து முடிப்பர். வலைபடுத்து முடிந்ததும் இறுதியாக வலையுடன் கட்டப்பட்டுள்ள பாதைக் கயிற்றை நாற்பது யார் இளக்கி வள்ளத்தின் அணியத்துடன் இறுகக் கட்டி விடுவார்கள். பின்பு வள்ளத்தினுள் கடலின் அலைகளினால் அள்ளி வீசப்பட்ட தண்ணீர்கள் இருந்தால் அள்ளி வெளியே ஊற்றி துப்புரவு செய்த பின் தத்தமது இரவுச் சாப்பாட்டை உண்பர்.

லோமியா விளக்கை பாய்மரத்தில் தொங்க விட்டு இரவு நித்திரை செய்வர். லோமியா விளக்கை கொழுத்தி வைப்பது இரவில் வரும் வேறு கப்பல்களினாலோ, வள்ளங்களினாலோ தமக்கு கப்பல் தீங்கேற்படக்கூடாதென்பதற்காகவே. நித்திரையில் இருப்பவர்கள் நிலவு தோன்றும் காலங்களில் நிலவை வைத்து நேரத்தை கணிப்பார்கள். மற்றும் காலங்களில் வெள்ளியை வைத்து நேரத்தை கணிப்பார்கள்.

இவற்றில் மாலை வெள்ளி, தட்டு வெள்ளி, குருசு வெள்ளி, ஆறாம் மீன் விடிவெள்ளி என்பன குறிப்பிடத்தக்கவை. மேற்குறிப்பிட்ட ஆதாரங்களை வைத்து கண் விழிப்பவர்கள் காலை ஆறு மணிக்கு தாம் பிடித்த மீன்கள்ளை சந்தைப்படுத்தும் நோக்கத்தை வைத்து அதிகாலை இரண்டு மணிக்கோ அல்லது மூன்று மணிக்கோ கடலில் படுத்த வலைகளை கிளப்பத் தொடங்குவர். வலை கிளப்பி முடிவதற்கு எப்படியும் இரண்டு மணித்தியாலயங்கள் செல்லும். அதனால் வள்ளத்தில் உள்ள மூவரும் மாறி மாறி வலைகளை ஏற்றுவார்கள்.

ஒருவர் வலைகளை இழுக்க. இருவர் மீன்களை வலையில் இருந்து கழற்றுவர். கழற்றிய மீன்களை பக்குவமாக அதற்குரிய இடத்தில் மீன்களுக்கு மேல் மீன்கள் போடாது பரவலாக்கி வைப்பர் மீன் மீன்மேல் ஒன்று அடுக்காக வைக்கப்பட்டால் மீன்கள் பழுதடையும் சாத்தியக்கூறு உண்டு. வலைகள் யாவும் கிளப்பி முடிந்ததும் கரையை நோக்கி பாயின் உதவியுடன் வள்ளத்தை செலுத்தி வருவார்கள். கரை யை அடைந்ததும் மீன்களை சந் தைப்படுத்துவதை முதலில் செய்து முடித்த பின் வழமையாக தாம் நங்கூரமிடும் இடத்திற்கு வள்ளத் தைக் கொண்டு சென்று நங்கூர மிட்டு, பின் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட அன்றாட தேவைக்கான மீன் களை கொண்டு வீடு செல்வர்.

மேற்படி நிகழ்வுகள் யாவும் வழமையாக அன்றாடம் நடப்பதை காணலாம். இதில் பிடிபடும் மீன்களுக்கேற்ப வலைகளை மாற்றிக் கொண்டு போவதும் சாதாரண நிகழ்வுகள். காற்றின் வீச்சு வேகங்களைப் பொறுத்து மீன்பிடிக்கச் செல்லும் நேரங்கள் மாற்றமடைந்தாலும் பி. ப. 5 மணிக்கு குறிப்பிட்ட இடத்தில் வலைகளை படுக்க வேண்டும் என்பதும் காலை 6 மணிக்கு கரையை அடைந்து விட வேண்டும் என்பதிலும் மாற்றம் எதுவும் இருப்பதில்லை, இவ்வாறு அந்நூலில் கூறப்பட்டிருந்தது.ஆனால் தற்போது நவீன உபகரணங்கள் இவ்வழமையை முற்றிலும் மாற்றிவிட்டது.

பலநூறு வருடங்களாக வடபகுதியைச் சேர்ந்த சில கிராமத்தவர் மரப்படகு கட்டும் தொழில்நுட்பமும் அனுபவமும் கொண்டவர்களாக இருந்தார்கள். இவர்கள் தம் பிற்காலத்தில் ஜா-எல, மற்றும் நீர்கொழும்பு பகுதியில் மரப்படகு கட்டும் தொழிலை சிங்களத் தொழிலாளர்களுக்கு கற்றுக் கொடுத்தார்கள்.

### மீன் பிடிப்பில் நவீன தொழில்நுட்ப உபகரணங்கள்

கடல் உயிரின உற்பத்திகளுக்கு அதிக கேள்வி ஏற்பட்டமையால் மீன்பிடிக் கைத்தொழில் வினைத்திறனாக மாற்றப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. நவீன தொழில்நுட்பச் சாதனங்களை இணைத்துக் கொள்வதன்மூலம் இதனை மேற்கொள்ள முடியும். ஆழ்கடலில் நீண்டகாலம் தங்கியிருந்து மீன்பிடியில் ஈடுபடும் மீனவர் தாம் நிற்கும் இடத்தைச் சரியாக அறிந்து கொள்ளவும் .மீன்கள் உள்ள இடத்தைத் துல்லியமாக அறிந்து கொள்ளவும் தரையுடனும் வேறு மீன்பிடிக்கலன்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்தவும் கால நிலைத் தகவல்களைப் பெறவும் இந்தத் தொழில்நுட்ப உபகரணங்கள் உதவுகின்றன.

மீனவர்கள் ஆழம் குறைவான பகுதியில் மீன்பிடிக்கும் போது தொடர்பாடலுக்கு செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்துகிறார்கள். மீன்பிடியில் ஈடுபடுவோர் சமிக்ஞைகளை இனங்காணவும் உகரணங்களைப் பயன்படுத்தவும் பராமரிக்கவும் தெரிந்திருக்க வேண்டும். அத்துடன் சட்டங்களை அறிந்திருத்தல், வரைபடங்களை வாசித்தல் போன்ற திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பொதுவாக சமிக்ஞைகள் ஆபத்துக்கள் ஏற்படும் போதும் ஆபத்தான நிலமைகளைத் தவிர்ப்பதற்கும் பயன்படுத்தப்படுகின்றது. இரவு நேரத்தில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கும் ஆபத்தான நிலமைகளை பிறருக்கு தெரியப்படுத்தவும் ஒளிச்சமிக்ஞை பயன்படுத்தப்படுகின்றது.

இரவு நேரங்களில் படகில் இடது பக்கம் சிவப்பும் வலது பக்கம் பச்சைநிற ஒளிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆபத்து வேளைகளில் சிவப்பு நிற புகையெழுப்புதல், இருகைகளையும் மேலும் கீழுமாக அசைத்தல் போன்ற சமிக்ஞைகள் பயன்படுத்துத்தப்படுகின்றன. உயிர்காப்புத் தொகுதியில் உயிர்காப்புப் படகு, உயிர்காப்பு மேலங்கி, மிதப்பு வளையங்கள், இறப்பர் காலணிகள், தீயணைப்பு உபகரணம் போன்றன உள்ளடங்கியிருக்கும்.

### இருக்கும் இடத்தை அறிய உதவும் செய்மதிவழிகாட்டி

செய்மதி வழிகாட்டி விண்வெளியில் உள்ள செய்மதிகளிலிருந்து வெளிவிடப்படும் அலைகளின் மூலமாகச் செயற்படும் உபகரணமாகும். ஒரு மாலுமி படகோட்டலின் போது தான் நிற்கும்இடம்,தான் போக வேண்டிய இடத்துக்கான தூரம், அந்த இடத்தின் கோணம், திசை, படகின் வேகம் ஆகியன தொடர்பான தகவல்களை GPS மூலம் பெறலாம்.

### கடல் ஆழத்தையும் கடலில் உள்ள மீன்களையும் கண்டறிய உதவும் உபகரணங்கள்.

எதிரொலிமானி ஒலிப்பான் மீன்களை இனங்காணும் உபகரணம் மற்றும் சோனார்கருவி ஆகிய மூன்றும் கடல் ஆழத்தையும் கடலில் உள்ள மீன்களையும் கண்டறிய உதவுகின்றன.

### எதிரொலிமானி ஒலிப்பான்

படகின் அடிப்பகுதியில் பொருத்தப்பட்டுள்ள உபகரணத்தின் மூலமாக அனுப்பப்படும் ஒலி அலைகள் கடலின் அடியில் பட்டு மீண்டும் வர எடுக்கும் காலத்தின் அடிப்படையில் மீன்பிடிப்படகு தரித்து நிற்கும் இடத்தின் ஆழம் அறியப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடாவுக்கு...

கனடாவில் பூர்வ குடிமக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டதாகவும் அதற்கு எதிராக இனப்படுகொலை தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.

கனேடியப் பிரதமர் கடந்த 18ஆம் திகதியை இலங்கையின் இனப்படுகொலை தினமாக பிரகடனம் செய்து, இலங்கைக்கு பாரிய அபகீர்த்தியையும் அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளார்.

கனடாவின் பூர்வ குடிகள் இனப்படுகொலை செய்யப்பட்டதுடன், 1986ஆம் ஆண்டு மீதமாக இருந்த பிள்ளைகளையும் அவர்கள் கொலை செய்தனர் எனவும் மனித எச்சங்கள் காணப்பட்ட மனிதப் புதைகுழிகள் கண்டு பிடிக்கப்பட்டன எனவும் விமல் வீரவன்ஸ குறிப்பிட்டுள்ளார். (ம-7,9)

### மெகா பவர்

திகதி 2023.05.23
சீட்டிழுப்பு இலக்கம் 1471

வெற்றி எழுத்து X சுப்பர் இலக்கம் 11 வெற்றி இலக்கங்கள் 02 25 43 52

தெலக்ஷபதி அதிஷ்ட இலக்கம்

| | | | |
|---|---|---|---|
| 1 | 1319391 | 2 | 1351517 |
| 3 | 1003041 | 4 | 1208358 |
| 5 | 0319495 | 6 | 0092449 |
| 7 | 0848793 | 8 | 1331332 |
| 9 | 0982158 | 10 | 1574477 |

லக்சபதி அதிஷ்ட இலக்கம 7 2 4 7 8

தொலைபேசி 0112-470662, 0114-607000 இணையம் www.nlb.lk

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 23/05/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1578
வெற்றி இலக்கங்கள்: மீனம் 3 1 3 4 2 6
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2023.05.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1153
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 19 21 33 71

### கொவிசெத

திகதி 2023.05.23 சீட்டிழுப்பு இலக்கம் 3365
ஆங்கில எழுத்து D வெற்றி இலக்கங்கள் 31 46 56 64
தேசிய லொத்தர் சபை

### HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 2023.05.23
சீட்டிழுப்பு இலக்கம் 432
சிம்மம் 02 38 39 62 சிம்மம்
தேசிய லொத்தர் சபை

### மஹஜன சம்பத

திகதி 2023/05/23
சீட்டிழுப்பு இலக்கம் 5123
C 5 1 1 8 5 3
தேசிய லொத்தர் சபை

## திருமணத்துக்கு...

திரா ரக வாகனம் மற்றும் மதவாச்சி வீதியூடாக மன்னார் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியும் மோதி இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா மாவட்டத்தை சேர்ந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன் மனைவி உட்பட 9 வயது,6 வயது,4 வயதுடைய மூன்று பிள்ளைகள் உள்ளடங்களாக ஐவர், திருமண நிகழ்வு ஒன்றிற்காக முச்சக்கர வண்டியில் வருகை தந்த நிலையில் விபத்து இடம் பெற்றுள்ளது.

இந்த திருமண நிகழ்வு இன்று நடைபெறவுள்ள நிலையில் மன்னாரில் இருந்து தள்ளாடி நோக்கி பயணித்த மகேந்திரா ரக வாகனம் கட்டுப்பாட்டை இழந்து முச்சக்கரவண்டியில் மோதியது.

இந்த நிலையில் முச்சக்கரவண்டி சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்பவத்தில் காயமடைந்த ஏனையோர் மன்னார் பொது வைத்திய சாலையில் மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.(ம-7,9,285)

## புதிய மின்சார...

கள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க நேற்று தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச கட்டண திருத்தம் தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் பதில் ஜூன் முதலாம் திகதி பகிரங்கப் படுத்தப்படும் எனவும் அவர் கூறினார்.

இலங்கை மின்சாரச் சட்டத்தின் 30 ஆவது பிரிவு மற்றும் பிரிவு 17ன் படியே இவை வெளியிடப்படும் எனவும் ஜனக ரத்நாயக்க மேலும் தெரிவித்தார்.(ம-7,9)

## முன்னாள்...

டுத் தாக்குதலை நடத்துவதற்காக வெடி பொருட்கள் மற்றும் 2 மைக்ரோ ரக கைத்துப்பாக்கிகளை வைத்திருந்த குற்றச்சாட்டில் தங்கவேலு நிமலன் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு இரத்மலானை பிரதேசத்தில் இரண்டு மைக்ரோ பிஸ்டல்கள், சி-4 ரக உயர் வெடிமருந்துகள் மற்றும் தோட்டாக்களை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார்.

அந்த வழக்கின் மீதான நீண்ட விசாரணையின் பின்னர், மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கிடமின்றி அரசு தரப்பினால் நிரூபிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து இந்தத் தீர்ப்பினை வழங்கியுள்ளார். (ம-7,9)

## திருக்கேதீச்சர...

வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீச்சர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா இன்று 24 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (ம-7,9)

## 22 அரசியல்...

நேற்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியதையடுத்து இடம்பெற்ற வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் [illegible] யிலும் பயங்கரவாத [illegible]

கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் சிறைக் கைதிகளை விடுவிக்க அரசாங்கம் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

இது தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் நாம் வலியுறுத்தியுள்ளோம் என்றார்.

இதற்கு பதிலளித்த நீதி இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்ன, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 45 ஆண்களும், 01 பெண் என்ற அடிப்படையில் 46 பேர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

யுத்த காலத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப் பட்டிருந்த 30 பேரின் எண்ணிக்கை 22 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் தடுத்து வைக் கப்பட்டுள்ள 22 பேருக்கு எதிரான விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தினால் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே இந்த 22 பேர் தொடர்பில் நீதியமைச்சு சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒன்றிணைந்து விசேட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இவர்களையும் விடுதலை செய்வது தொடர்பான சட்ட நடவடிக்கை துரிதப் படுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7,9)

## நாட...

யாப்பா இதனைத் தெரிவித்துள்ளார்

பாதுகாப்புச் சட்டத்தின் 12வது பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7,9)

## விகா...

தையிட்டியில் அமைக்கப்படும் விகாரையை அகற்றக் கோரி பாராளுமன்ற உறுப்பினர்செல்வராசா கஜேந்திரன் தலைமையில் அவரது கட்சி உறுப்பினர்கள் சிலர் நேற்றுசெவ்வாய்க் கிழமை குறித்த விகாரைக்கு சற்று தூரத்தில் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.

அதன்போது அங்கு வந்திருந்த பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார், இவ்விடத்தில் சட்ட விரோதமான முறையில் கூட முடியாது. அதனால் இங்கிருந்து [illegible] கலைந்துசெல்லு




மாறு பணித்தனர்.

அதனை மீறி அங்கு நின்றவர்களை சட்டவிரோதமான முறையில் கூடி, பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க முயன்றனர் எனும் குற்றச்சாட்டில் கஜேந்திரன் எம்.பி, சட்டத்தரணி சுகாஷ், நான்கு பெண்கள் உள்ளிட்ட 9 பேரைக் கைது செய்தனர்.

அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தனியார் காணி ஒன்றில் நின்றிருந்த வேளை அவரை வலுக்கட்டாயமாக தூக்கி அக் காணியில் இருந்து பொலிஸார் அப்புறப்படுத்தி இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,9,33)

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2097 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.05.23 தினம் செவ்வாய்க்கிழமை
F 15 28 40 77
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,954,000/-
DLB

### சனிதா (Shanda)

செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்பு திகதி 2023.05.23 வெற்றி வாரம் 4258
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 46,323,208.20
வெற்றி இலக்கங்கள் 02 16 33 40 V
DLB

### சசிரி

வெற்றி வாரம் 327 சீட்டிழுப்பு திகதி 2023.05.23
வெற்றி இலக்கங்கள் 06 20 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,898,260/-
DLB

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,731,786.20
வெற்றி இலக்கங்கள் 14 18 21 61 கும்பம்
திகதி 2023-05-23 வெற்றி வாரம் 3809 வர்ணம் சிவப்பு
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,295,080/-
DLB

### லக்பதி

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 35 03 16 37 55
1273 2023.05.23 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 332,101,721.80
DLB

### அட கோடிபதி (ADA KOTIPATHI)

செவ்வாய்க்கிழமை வெற்றி வாரம் : 1923 சீட்டிழுப்பு திகதி : 2023.05.23
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 51,357,411.40
வெற்றி இலக்கங்கள் 03 44 51 70 ஆங்கில எழுத்து D
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாடிக்கையாளருக்கு மகிழ்ச்சியான செய்தி

கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

பிளாஸ்ரிக், பான்சி பொருட்கள், அலுமினிய சாமான்கள், சில்வர் சாமான்கள் பாடசாலை உபகரணங்கள், விளையாட்டு பொருட்கள், கிறீம் வகைகள், கவரிங் வகைகள், கிளினர், திரவியங்கள், கான்ட்வோஸ், கொம்போட், வாசனை திரவியங்கள், மாபிள் கிளினர், றூம் ஸ்பிறே, தையல் உபகரணங்கள், தையலுக்கு தேவையான மொடல் பட்டின்கள், மாபிள் பீங்கான்கள், றெயிபோம் பெட்டிகள், பாட்டா வகைகள், பேர்ஸ் வகைகள், அன்பளிப்பு பொருட்கள் மணிக்கூட்டு வகைகள்

**இவை அனைத்தும் 30 வீத கழிவுடன் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றது.**

என்பதனை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம். (15713)

### சரவணபவன் பான்சி ஹவுஸ்

26/1 ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம்.

உரிமையாளர்

தே.கலைத்தாசன் (சுரன்) 021 315 5900

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதை அறியத் தருகின்றோம்



077 544 8503 (15337)

## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு சந்திக்கு அண்மையில் தென்னை, பனை உடன் உள்ள காணி விற்பனைக்குண்டு.

077 172 1074 (15598)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15709)

076 825 7716 (ஆகாஸ்)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378, 076 097 3127

## விசேட விலைக்கழிவு

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் யாழ் மாவட்ட விநியோக உரிமை முகவராகிய சிவா நறுமணப் பூங்காவில்,ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தின் உற்பத்திப் பொருட்களை மொத்தமாக கொள்வனவு செய்யும் வைத்தியர்கள், வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

சிவா நறுமணப்பூங்கா, இல-288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 2567 (சத்திரச் சந்திக்கு அருகாமையில்) (C-6604)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் இளவாலையில் 40 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- இளவாலையில் இருந்து மாதகல் செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- 18 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகவும், மூன்று பரப்பாகவும், பிரிக்கப்பட்ட நிலையில்.
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், குடியிருப்புகள் சூழ உள்ள காணி.
- இளவாலை சந்தியில் இருந்து 1 km தூரம்.
- திருமண மண்டபங்கள், வியாபார நிலையங்கள், சுற்றுலா விடுதிகள், வீடுகள் அமைக்க உகந்த இடம். (15713)

076 333 6079

076 733 6093

076 911 9371

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

Srilankan Visa Extension | இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS 49A,சுப்பர் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS

0777-068-777 (C-6608)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள் விரைவுப் பொதிகள் சேவை விசா சேவைகள் V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை, கோப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, சங்கானை, கொழும்பு

வயது : 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்) அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-

பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777 v2vacancies@gmail.com (C-6608)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஓட்டுமடத்தில் 42 பரப்பு காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்தில் இருந்து அராலி வட்டுக்கோட்டை செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- யாழ் நகரில் இருந்து 1 ½ km தூரத்தில்.
- நான்கு பரப்பாகவும் மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் (15713)

077 638 5683, 076 755 8606, 077 259 0391

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 20 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் வீதியில்
- புத்தூர் பிரதான தண்ணீர்த் தாங்கி அருகாமையில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் (15713)

076 788 0591

076 733 6047

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 64 பரப்பு காணி விற்பனைக்கு**

- கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 ½ km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி
- கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புகள் சூழ உள்ள காணி (15713)

076 739 0413

076 436 5814

077 065 4525


## மரண அறிவித்தல்



### முருகுப்பிள்ளை யோகரத்தினம்

வளலாய் மேற்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை யோகரத்தினம் அவர்கள் 22.05.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முருகுப்பிள்ளை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் நாகராசா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் நாகினிதேவியின் அன்புக் கணவரும் நவரத்தினத்தின் சகோதரனும் முருகதாஸ், விஜயதாஸ், விஜிதா, கவிதா, உதயதாஸ், சிவகௌரி, இன்பறுபன், துசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலாதேவி, மதுராஜினி, இலங்கைநாதன், புஸ்பாகரன், தனுயா, சந்துரு, மயூறிக்கா, அர்ச்சனா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2023) நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வளலாய் கூனங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வளலாய் மேற்கு, அச்சுவேலி. (15718)

தகவல் : குடும்பத்தினர்

077 795 0748, 077 176 2662

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.